Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 30 புதன்கிழமை (12.02.2014) | பக்கங்கள் 20 | ஓசை - 134



# அபிவிருத்தியில் இணைந்து செயற்பட ஆளுநரும் முதல்வரும் விருப்பம்

## இருதரப்புடனும் ஐ.நா. அதிகாரிகள் பேச்சு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில் இணைந்து செயற்படுவதற்கு ஆளுநர் விருப்பம் தெரிவித்துள்ளதாக ஐ.நா. குழுவினர் தெரிவித்துள்ளனர். இதனை வரவேற்கின்றோம் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐ.நா.வின் பொருளாதார விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ஹவோரியங் சூ தலைமையிலான குழுவினர் வடமாகாண முதலமைச்சரை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் முதலமைச்சர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.




அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாரிய செயற்றிட்டங்களிலும் பார்க்க மக்களின் அன்றாடப் பிரச்சினைகளையும், போரினால்

19 ஆம் பக்கம் பார்க்க

# மாங்குளம் அருகில் கோர விபத்து



## பயணிகள் ஐவர் ஸ்தலத்தில் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கும் மாங்குளத்துக்கும் இடைப்பட்ட ஏ-9 வீதியில் இடம் பெற்ற கோர விபத்தொன்றில் ஐந்துபேர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஆறுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை மூன்று மணியளவில் பயணிகள் வான் ஒன்று டிப்பர் வண்டி ஒன்றுடன் மோதிக்கொண்டதனால் இந்த விபத்து ஏற்பட்டது.

கிளிநொச்சிக்கும் மாங்குளத்துக்கும் இடையில் 233ஆம் மைல் கல்பகுதியில் இடம்பெற்ற இந்தக் கோர விபத்தில் பலியானவர்களது சடலங்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் வைக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன், குறித்த வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் குறிப்பிட்டனர். இந்த விபத்தில் சசிதரன் பதுமன் (வயது-5), சசிதரன் யர்மிதா (வயது-7), சோதிலிங்கம் மிதீபன் (வயது-35), சின்னத்துரை பரமேஸ்வரி (வயது-75), சின்னத்துரை சிவனேஸ்வரன் (49) என்பவர்களே உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சசிதரன் சர்மிளா (வயது-30) சிவனேசன் செந்தூரி (வயது-12), சிவனேசன் கபினா (வயது-8), சிவனேசன் தர்மிளா (வயது-31), ஜெயக்குமார் தயாநிதி (வயது-53), சோதிலிங்கம் சஜீவன் (வயது-38) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சோதிலிங்கம் சஜீவனை தவிர ஏனைய ஐவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மாங்குளம் பொலிஸார மேலும் தெரிவித்தனர்.

# அரசின் அணுகுமுறையில் எமக்கு நம்பிக்கை இல்லை சர்வதேசமே உதவவேண்டும்



அரசாங்கமும், ஜனாதிபதியும் எமது நிபந்தனைகளை மதிக்காத வரையில் அரசுடன் பேச்சுக்களுக்கு இடமில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இதுவரை காலமும் அரசாங்கத்தினால் பெற்றுக்கொடுக்க முடியாத எமக்கான கோரிக்கைகளை இனிமேலும் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளின் மூலம் வென்றெடுக்க முடியாது. சர்வதேசத்தின் உதவியே எமக்கான வழிமுறையென்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். சுமந்திரன் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் வார்த்தைகளில் எமக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை. 2011ஆம் ஆண்டு அரசாங்

19 ஆம் பக்கம் பார்க்க

# புதுக்குடியிருப்பில் விபத்து; தாயும் மகளும் மரணம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்றுக்காலை 8.15 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் கோம்பாவில் இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த 26 வயதான ஆனந் சாதனா என்ற தாயும் 3 வயதான ஆனந் யதுசிகா என்ற அவரது மகளும் மரணமடைந்ததாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், இந்த விபத்தில் படுகாயமடைந்த ரதி என்ற பெண் புதுக்குடியிருப்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் எரிபொருள் நிலையத்தில் மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் நிரப்பி விட்டு புறப்பட்டபோது, எதிரே வந்த கன்டர் ரக வாகனம் மோதி விபத்து சம்பவித்ததாகவும் இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகளும் மரணமடைந்ததாகவும் பொலிஸார் கூறினர். இதனைத் தொடர்ந்து கன்டர் ரக வாகனச் சாரதியை கைதுசெய்ததாகவும் பொலிஸார் கூறினர். இவர்களின் சடலங்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

# பலாலியில் படைவீரர் மரணம்

(யாழ்ப்பாணம்)

பலாலிப் பகுதியில் மதில் சுவர் இடிந்து வீழ்ந்ததில் இராணுவ வீரர் ஒருவர் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அங்கு உயிரிழந்துள்ளார். கண்டி வலப்பனையைச்சேர்ந்த எம்.எஸ்.பண்டார என்பவரே இந்தச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக்காலை இடம் பெற்ற

19 ஆம் பக்கம் பார்க்க

# தனியார் காணிகளை சுவீகரிப்பதை படையினர் நிறுத்த வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. கோரிக்கை



படையினரின் தேவைகளுக்காக தனியார் காணிகளை கையகப்படுத்துவதை நிறுத்த வேண்டும் இந்த விடயத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் படி மக்களின் காணிகள் மக்களுக்கே என்ற கொள்கை பின்பற்றப்படல் வேண்டும். இங்கே மனிதாபிமானம் முக்கியமானது என நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் காணி தொடர்பான பரிந்து

19 ஆம் பக்கம் பார்க்க

# சீனாவின் உதவி எப்போதும் உண்டு

## சீன அமைச்சர் உறுதி

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு பூரண அளவில் ஒத்துழைப்பு வழங்கப்படும் என சீன வெளிவிவகார அமைச்சர் வேங் யீ தெரிவித்துள்ளார்.


இலங்கையின் உள்விவகாரங்களில் வெளிநாடுகள் தலையீடு செய்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய சுதந்திரம், இறைமை மற்றும் பௌதீக ஒருமைப்பாடு

19 ஆம் பக்கம் பார்க்க

# அம்பன் அபிவிருத்திக்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்

**- ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவிப்பு -**



(பருத்தித்துறை)

அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் அடுத்த வருட விளையாட்டுப் போட்டியை பாடசாலை அமைந்துள்ள வளாக மைதானத்தில் நடத்துவதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்து வருகின்றார். அம்பன் அபிவிருத்திக்காக தொடர்ந்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பருத்தித்துறை பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி இணைப்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு, அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி பாடசாலை அதிபர் வி.பரமேஸ்வரன் தலைமையில் பிங்பொங் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இவ்விளையாட்டு விழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எட்டு இலட்சம் ரூபாவை ஏற்கனவே இக்கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் வழங்கியுள்ளார். அதனூடாக முன்பள்ளி மற்றும் சுற்று வேலிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

இப்பாடசாலையின் கடந்த வருட பரிசளிப்பு விழாவின் போது மகேஸ்வரி நிதியத்தின் இணைப்பாளரிடம் மாணவ சமூகத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக மேலைத்தேய வாத்தியக் கருவிகள் (பாண்ட்) வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டது.

இப்பாடசாலையின் மைதானப் புனரமைப்பிற்காக சுமார் 21 இலட்சம் ரூபா செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அடுத்த வருட விளையாட்டுப் போட்டி பாடசாலை அமைந்துள்ள வளாக மைதானத்தில் இடம்பெறும். மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எப்போதும் தயாராக உள்ளார் என்றார்.

மகேஸ்வரி நிதியத்தின் இணைப்பாளர் தம்பித்துரை ரஜீவ் பாடசாலையின் அதிபர் வி.பரமேஸ்வரனிடம் பாண்ட் வாத்தியக் கருவிகளை கையளித்தார்.

# தேசியமட்ட ஒலிம்பியாட் போட்டிக்கு வலிகாம வலயத்தில் 14 மாணவர்கள் தெரிவு

(வலிகாமம்)

இலங்கை கல்வியமைச்சினால் தேசிய மட்டத்தில் 2014 ஆம் ஆண்டு நடத்தப்படவுள்ள கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிக்கு வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து இம்முறை 14 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களான லோ.சிறிகரன், எஸ்.சகீந்தன், கே.காருண்யா ஆகியோரும், மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகளான விபுஷா சிறிகரன், ஜெசுந்தா ஜுலான் ஆகியோரும், பண்ணாகம் மெய்கண்டான் மாணவன் அ.வெற்றிதரன், மகாஜனக் கல்லூரி மாணவன் க.வித்தகன், விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களான வ.கபீசன், யோ.யோகநேசன், சரண்யா ஸ்ரீகிருஷ்ணராஜா, ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவன் சு.தனுஷியன், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் ஜெ.நிக்சன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களின் விபரங்கள் வலயமட்டத்தில் நடத்தப்பட்ட ஒலிம்பியாட் போட்டியிலிருந்து தெரிவுசெய்யப்பட்டு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஊடாக கல்வியமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (06)

# பொதுக்கூட்டங்கள்

(சாவகச்சேரி)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெறுகின்றது.

உறுப்புரிமைச் சங்கங்களின் பிரதிநிதிகள் யாவரையும் இப்பொதுக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

❋ ❋ ❋ ❋

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்க விசேட பொதுச்சபைக் கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு செ.மகேஸ்வரன் தலைமையில் இக்கூட்டம் இடம்பெறும்.

இதில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி உதவி பிரதேச செயலர் ந.றஞ்சனா ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இதில் பொதுச்சபை மற்றும் இயக்குநர் சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சிறு விளம்பரம்

### குரு சாத்திரம்

ஆண் குழந்தை வேண்டுமா? பெண் குழந்தை வேண்டுமா? நீங்கள் விரும்பும் குழந்தைச் செல்வத்தை பெற்றெடுத்துக் கொள்வதற்கு எம்மிடம் குடும்பத்துடனும் இருவரின் குறிப்புடனும் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 0778019323. (C/3345)

# கலந்துகொள்ளவும்

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட (வடமராட்சி வடக்கு) பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான பிரதேச விளையாட்டு விழாவினது போட்டிகள் தொடர்பான அட்டவணை நாளை பி.ப. 2.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தயாரிக்கப்படவிருப்பதனால் தவறாது விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்களை கலந்துகொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

# திருவிழா

மாதகல் துறைமுகப் பகுதியில் கடற்கரை ஓரத்தில் அமையப் பெற்ற தூய லூர்து அன்னை திருத்தல திருவிழாவில் வரும் 15 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு அன்னையின் திருச் சுருப தேர்ப் பவனியும் நற் கருணை வழிபாடும், 16 ஆம திகதி காலை 7.00 மணிக்கு யாழ். ஆயர் தலைமையில் திருநாள் திருப் பலியும் நடைபெறவுள்ளது.

# அலங்கார உற்சவமும் மாசி மக தீக்குளிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மடம் அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதனை முன்னிட்டு தினமும் ஆலய முன்றலில் சிறப்பு சொற்பொழிவுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு சமய சொற்பொழிவுகள் இரவில் இடம்பெற்று வருகின்றன.

இவ் உற்சவத்தில் நாளைமறுதினம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.00 , மணிக்கு தேர்த்திருவிழாவும், மாசி மகமான 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு சிறப்பு நிகழ்வாக வருடாந்த மாசிமக தீக்குளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு திருவூஞ்சல் நிகழ்வும், 17 ஆம் திகதி திங்கட்கிழமை வைரவர் சாந்தி நிகழ்வும் மாலை 4.00 மணிக்கு இடம்பெற்று வருடாந்த அலங்கார உற்சவம் நிறைவுக்கு வரவுள்ளது. (42)

# முழுநிலாக் கருத்தரங்குகள்

கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தின் முழுநிலா நாள் கருத்தரங்கு எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கரைச்சி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

கிளிநொச்சி தமிழ் சங்கத்தின் தலைவர் வே.இறைபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வேதநாயகம் தபேந்திரன் 'வாழ்வியல் விழுமியங்கள்' எனும் தலைப்பில் உரையாற்றுவார்.

அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு இதே மண்டப்த்தில் நடைபெறவுள்ள தமிழ்ச் சங்கத்தின் செயலாண்மைக் குழுக் கூட்டத்திலும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் தமிழ்ச் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (90)

❋ ❋ ❋ ❋

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலாக் கருத்தரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

'நீரிழிவுடன் நீடித்த வாழ்வு வாழ்வது எப்படி' என்ற தலைப்பில் கருத்துரைகளை பொது வைத்திய நிபுணர் டாக்டர் ரி.ஸ்ரீகரன் வழங்கவுள்ளார்.

# இன்று கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புக் கொண்ட நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலய பெரும் சாந்தி மகா கும்பாபிஷேகம் இன்று காலை இடம்பெறும்.

காலை 9.00 மணிக்கும் 10.15 மணிக்கும் உட்பட்ட மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஆசியுரைகள் குருமார் சம்பாவனை இடம்பெறும் என ஆலய பிரதம குரு சிவத்திரு கந்தையா நாகேந்திரம் அறிவித்துள்ளார்.

இன்றைய சிறப்பு கும்பாபிஷேக நிகழ்வில் சிவஸ்ரீ சதா.மகாலிங்கசிவக் குருக்கள், 'சிவஸ்ரீ சி.மகேந்திரக் குருக்கள் ஆகியோர் வழிபாடு நடத்துவர்.

இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு அருள் பெறுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1033 | திகதி 10.02.2014

வெற்றி எண்கள்: 19 24 32 59 | ஆங்கில எழுத்து: T

ஜக்பொட் பரிசு ரூ. 2,16,17,700/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 2,16,17,700/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 9 | 50,000/= | ரூ. 4,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 270 | 1,000/= | ரூ. 2,70,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 470 | 1,000/= | ரூ. 4,70,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12010 | 60/= | ரூ. 7,20,600/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6260 | 40/= | ரூ. 2,50,400/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 156650 | 20/= | ரூ. 31,33,000/= |
| ஆங்கில எழுத்து | 22716 | 20/= | ரூ. 4,54,320/= |
| | | மொத்தம் ரூ. | 67,48,320/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| வவுனியா | 605729497-6-46 |
| மாத்தறை | 605732009-6-06 |
| குருநாகல் | 605728471-8-28 |
| கொழும்பு | 605720843-0-10 |
| கிளிநொச்சி | 605726331-9-09 |
| கம்பஹா | 605723198-8-28 |
| கொழும்பு | 605720907-3-33 |
| புத்தளம் | 605722709-0-40 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 71,48,320/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 21,924,340/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.02.13 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 335467

(C/3338)

# 25 ஆயிரம் காணி உறுதிப்பத்திரங்கள் இவ்வருடம் வழங்கப்படும்

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

25 ஆயிரம் காணி உறுதிப்பத்திரங்கள் இவ்வருடம் வழங்கப்படு மென காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ்பழைய பூங்கா வளாகத்தில் இருபத்தைந்து மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள யாழ் மாவட்ட நில அளவைக் காரியாலயத் திறப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார். அங்கு அமைச்சர் தொடர்ந்து தெரிவிக்கையில் யாழ்ப்பாண மக்கள் உட்பட வடக்கு கிழக்கு மக்கள் யுத்தம் காரணமாக சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வந்தனர். ஆனால் இன்று யுத்தம் நிறைவு பெற்று ஜனாதிபதி மகிந்த ராஜக்ஷவின் மகிந்தசிந்தனைத் திட்டத்தின் கீழ் இப்பகுதியில் பல அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. என்று குறிப்பிட்ட அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் வடக்கு கிழக்கு மக்களின் காணிப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பது. எங்களது பொறுப்பு கடந்த 30 வருடகால யுத்தம் இந்த மண்ணுக்காகவே நடைபெற்றது.

அதனைத்தீர்த்து வைப்பது எமது பொறுப்பாகும் கடந்த காலங்களிலே இராணுவத்தினரினால் பயன்படுத்தப்பட்டு வந்த 18 ஆயிரத்து 587 ஏக்கர் நிலமும் கடற்படையினரினால் பயன்படுத்தப்பட்டு வந்த 807 ஏக்கர் நிலமும், விமானப்படையினரினால் பயன்படுத்தப்பட்டு வந்த 717 ஏக்கர் காணியும் மக்களிடம் மீளகையளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்ததுடன் வடக்கில் அரச தேவைக்காக சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு வருகின்ற மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் இழப்பீடுகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.



தொடர்ந்து தெரிவித்த அமைச்சர் இன்று இந்தக் காரியாலயத்தைத் திறந்து வைப்பதனைப் போன்று கடந்த வருடம் கிளிநொச்சி மாவட்டத்திலும் திறந்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அந்தக் காலப்பகுதியில் அங்கு காணித் திணைக்களத்தின் மூலமாக பத்தாயிரம் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் இந்த வருடம் இந்தப் பகுதி மக்களுக்கு 25 ஆயிரம் காணி உறுதிப்பத்திரங்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரித்தார். (பா)

# புதுக்குடியிருப்பு உள்ளக வீதிகளை புனரமைக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குச் சொந்தமான சுமார் 200இற்கும் மேற்பட்ட வீதிகளில் ஒரு சில வீதிகளே புனரமைக்கப்பட்டுள்ளபோதிலும் ஏனைய வீதிகளை புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயளர் பிரிவினையும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயளர் பிரிவினையும் உள்ளடக்கிய வகையில் அமைந்துள்ள புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்குச் சொந்தமான பல வீதிகள் புனரமைக்கப்படாமல் பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன. அத்துடன் பல வீதிகள் அழிவடைந்துள்ளன. இந்நிலையில் இவ்வீதிகளை புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவ்விடயம் தொடர்பாக புதுக்குடியிருப்புப் பிரதேச சபை செயலாளரை தொடர்பு கொண்டபோது பிரதேசசபைக்குச் சொந்தமான சுமார் 484.83km நீளம் கொண்ட 200 இற்கும் மேற்பட்ட வீதிகள் இருப்பதாகவும் இவற்றை புனரமைப்பதற்கு சபையில் போதிய நிதியில்லை என்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக குறிப்பிட்ட சில வீதிகளை மாத்திரம் தற்போது புனரமைத்து வருகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (கே)

## தகவல் தொழில் நுட்பம் 51 மாணவர்கள் சித்தி

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப பாடத்துக்கான பரீட்சை கடந்த வருடம் நடைபெற்ற நிலையில் அதன் பெறுபேறு நேற்றுமுன்தினம் வெளிவந்துள்ளது.

இதில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 51 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இதன்படி 52 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றிய நிலையில் A தரத்தில் 3 மாணவர்களும் B தரத்தில் 14 மாணவர்களும், C தரத்தில் 24 மாணவர்களும், S தரத்தில் 10 மாணவர்களும் சித்தியடைந்துள்ளதாகவும் வரலாற்றில் இப்பெறுபேறு இவ்வருடமே இப்பாடசாலைக்கு கிடைத்துள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தா.

## வியாபார வரி உரிமத்தை பெற்றுக்கொள்ள காலக்கெடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட அனைத்து வியாபார நிறுவனங்களும் தங்கள் நிறுவனத்திற்குரிய வியாபார வரியையும் வியாபார உரிமத்தையும் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பதாக யாழ்.மாநகர சபை நானாவித இறைவரிப் பகுதியில் செலுத்தி வியாபார உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை பிரதம இறைவரிப் பரிசோதகர் கா.ஜெயராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு செலுத்தத் தவறியவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வியாபார வரிக் கட்டணம் செலுத்தாதோர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வியாப்ார வரி அறவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# சவிய பெண்கள் அமைப்பில் கல்விசார் போட்டிகள்

சவிய பெண்கள் அமைப்பு தேசிய மட்டத்திலான கல்விசார் போட்டி மற்றும் சமூக நிகழ்ச்சித் திட்டங்களையும் சர்வதேச பெண்கள் தினத்தன்று நடாத்துவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

'ஊக்கமளிக்கும் மாற்றம்' என்ற தொனிப் பொருளில் கட்டுரைப்போட்டி, வரைதல், சுவரொட்டி போட்டிகள், கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவாக நடைபெறவுள்ளன. கனிஷ்ட பிரிவு வயது 11 - 17 வரைக்கும், சிரேஷ்ட பிரிவு வயது 18 - 30 வரைக்கும் உள்ளவர்கள் பங்குபற்றலாம். போட்டியாளர்கள் பாடசாலையிலிருந்தும், சமூக அமைப்பிலிருந்தும், மற்றும் தனியார் துறையிலிருந்தும் அனுமதிக்கப்படுவர். கட்டுரைகள் 500 சொற்கள் கனிஷ்டபிரிவு, 750 சொற்கள் சிரேஷ்ட பிரிவுக்குமாகும். வரைதல்கள், சுவரோட்டிகள் 20x25 என்ற அளவிலான பிறிஸ்டல் போட்டை பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். ஆக்கங்கள் அனுப்பும் இறுதித்தினம் எதிர்வரும் 25ஆம் திகதி ஆகும் ஒருங்கிணைப்பாளர், சவிய பெண்கள் அமைப்பு இல. 22/1, வேவெல்வெல வீதி, காலி என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

# பாவப்பட்ட வன்னி மாணவர்கள்....




வன்னியின் ஆசிரியர் பற்றாக் குறையைத் தீர்ப்பதற்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சு ஒரு அருமையான தீர்வைக் கண்டு பிடித்து அறிவித்திருக்கிறது.

என்ன தீர்வு தெரியுமா?

**'கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சியை முடித்து வெளியேறும் ஆசிரியர்கள் குறிப்பிட்ட காலத்துக்கு நிபந்தனை அடிப்படையில் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள பாடசாலைகளில் நியமிக்கப்படவுள்ளனர். கல்வி அமைச்சின் கோரிக்கையை பயிற்சி ஆசிரியர்கள் சாதகமாகப் பரிசீலிப்பதாகத் தெரிவித்துள்ளனர்'.**

இதுதான் அந்தத் தீர்வு.

தயவு இதைச் சற்று ஊன்றிக் கவனியுங்கள்.

இந்த ஆசிரியர்கள் தற்போதே பயிற்சியை முடித்திருப்பவர்கள்.

இவர்களுக்கான பரீட்சை இன்னும் நடக்கவில்லை. அந்தப் பரீட்சை நடந்து, அதன் பெறுபேறுகள் காணப்பட்டதன் பின்னரே இவர்களுக்கான சம்பள அதிகரிப்பு செய்யப்படும்.

அதுவரையிலும் இவர்கள் மிகக் குறைந்த சம்பளத்தில் வேலை செய்வோராகவே இருக்கின்றனர்.

அதிலும் இந்த ஆசியரியர்களில் பெரும்பாலானவர்கள் (75 வீதத்திற்கும் அதிகமானவர்கள்) தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி, 2009 இல் நியமனம் பெற்றவர்கள்.

ஏனையவர்களே வன்னி மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆகவே பெரும்பாலானவர்களாக இருக்கும் தொண்டர் ஆசிரியர்களும் தற்பொழுது 6000 (ஆறாயிரம்) ரூபாவை மட்டுமே சம்பளமாகப் பெறுகின்றனர்.

கடந்த மாதம் மாகாணசபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் இது 10,000 (பத்தாயிரம்) ரூபாவாக அதிகரிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது.

ஆனாலும் இது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.

எனவே ஆறாயிரம் ரூபா சம்பளத்தைப் பெறும் பெரும்பாலான ஆசிரியர்களே தற்போது வன்னிக்கு அனுப்பப்படவுள்ளனர்.

இப்படிக் குறைந்த சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு, எப்படி இவர்கள் வன்னிக்குச் செல்ல முடியும்?

இது நீதியானதல்ல.

அடுத்தது, இவர்கள் தற்போதுதான் பயிற்சியை முடித்திருக்கிறார்கள்.

இவர்களையே முழுமையாக வன்னிக்குத் தள்ள முற்படுகிறது வடமாகாண–சபையின் கல்வி அமைச்சு.

இவர்களை யாழ்ப்பாணத்துக்கும் பகிர்ந்தளிப்பதைப்பற்றி அது சிந்திக்கவில்லை.

அப்படிப் பகிர்ந்தளித்தால் யாழ்ப்பாணத்திலுள்ள ஆசிரியர்களில் ஒரு தொகுதியினர் கண்டிப்பாக வன்னிக்குச் செல்லவேண்டியிருக்கும்.

ஆனால், அவர்களோ வன்னிக்குச் செல்லத்தயாரில்லை.

அவர்களை அனுப்புவதற்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கும் அமைச்சருக்கும் திராணியுமில்லை.

காரணம் வேறொன்றும் இல்லை.

அப்படி வன்னிக்குச் செல்ல வேண்டிய ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள், கடந்த தேர்தல்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து நின்றவர்கள். சிலர் தேர்தற் பரப்புரைகளில் கடுமையாக உழைத்தவர்கள்.

எனவே அவர்களை முறிக்கவோ கட்டுப்படுத்தி கடமையைச் செய்ய வைக்கவோ மாகாணக் கல்வி அமைச்சினால் முடியாது. அப்படி முயற்சித்தாலும் அவர்களுக்காக அவர்களுடைய தயவைப்பெற்று தெரிவாகிய ஏனைய மாகாணசபை உறுப்பினர்கள் விடமாட்டார்கள். அரசியல் செல்வாக்குடைய அவர்களை எவரும் எதுவும் செய்ய முடியாது.

ஆகவே, அவர்களை அனுசரித்துப் போவதைத் தவிர, மாகாணசபைக்கு வேறு கதியில்லை.

எனவே, வன்னிக்கு தேர்ச்சியும் அனுபவமும் வாய்ந்த ஆசிரியர்களை அனுப்ப முடியாத நிலையில், புதிய பயிற்சி ஆசிரியர்களையே மாகாணக் கல்வி அமைச்சு பிடித்திருக்கிறது.

இதன் மூலம் வன்னியில் பெரும் பிரச்சினையாக இருக்கும் ஆசிரிய பற்றாக்குறையைத் தீர்த்து விட்டதாகவும் இருக்கும். அதாவது யாழ்ப்பாண ஆசிரியர்களை நோகாமல் வைத்ததும் ஆகும்.

ஆகவே இதைச் சமாளிப்பதற்காகவே மாகாணசபை இந்தப் புதிய பயிற்சி ஆசிரியர்களின் கழுத்தில் கையை வைத்திருக்கிறது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டிருப்பது இந்தப் புதிய ஆசிரியர்களே. அவர்களில் பெரும்பாலானவர்கள் தொண்டர் ஆசிரியர்களாக இருந்து 2009 இல் நியமனம் பெற்றவர்கள் அல்லவா. இந்த நியமனத்தை வழங்கியவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியும்.

ஆகவே அப்படி நியமனம் பெற்றவர்களை வன்னிக்கு அனுப்பி அரசியல் ரீதியாகப் பழிவாங்கியதுமாகும்.

பாவம் வன்னி மாணவர்களும் வன்னி மக்களும். தங்களுடைய எதிர்காலத்தின் மீது தாங்களே மண்ணை அள்ளிப் போட்டுவிட்டனர்.

கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, வன்னியில் பணியாற்றியவர் என்பதால் தங்களின் நிலைமையை விளங்கிக் கொள்வார் என்று நம்பியவர்களின் நிலைதான் இன்று கோவிந்தா.

நம்பிக்கையுடன் இருக்கும்போது எந்தக் காரியமும் கடினமாகத் தெரிவதில்லை. - ஜோன்ரேட்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நாளைய நம்பிக்கைகள் நீங்கள்!

இளைஞர்களே நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லிக் கொள்கிறோம். அந்த இளைஞர் சமுதாயம் சரியாக நெறிப்படுத்தப்பட்டு வளர்கிறதா என்று சந்தேகம் வருகிறது.

இன்றைய இளைஞர்களைப் பார்க்கும் போது தமக்குள்ளேயே சுருங்கியவர்களாகவும், பொதுநலச் செயற்பாடுகளில் அக்கறை இல்லாதவர்களாகவும், அடுத்தவர்களோடு ஒருங்கிணைந்து செயற்படுதல் பெருமளவுக்குக் குறைந்து விட்டவர்களாகவும், சமூகமாக இயங்கும் தேடலைத் தொலைத்து விட்டவர்களாகவும் நுகர்வுக் கலாசாரத்தால் கவனச் சிதறல் ஏற்பட்டிருப்பவர்களாகவும் தென்படுகிறார்கள்.

இதை இளைய பருவத்தைத் தாண்டிவிட்டவர்கள் வழக்கமாகப் பாடும் புறணியாக எடுத்துக் கொண்டுவிடக் கூடாது. தங்களுடைய சமூகம் சார்ந்த அறிவுச் சேகரம், செயற்பாடுகள் எவையாக இருக்கின்றன என்று ஒவ்வொரு இளைஞன் யுவதியும் தங்களைத் தாங்களே கேட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு முந்திய தலைமுறையினரின் காலத்தில் இப்போது போன்ற மெத்தனம் இருந்ததில்லை.

இன்றைய சமூகம்சார் அக்கறை தேய்ந்திருக்கும் நிலைமைக்கு காரணங்கள் உண்டுதான். முப்பது வருடப் போர், அதன் தாக்கங்களிலிருந்து மீள முடியாமல் தவிக்கும் சமூக மனம், இந்த விரக்தி மனநிலையை நீடிக்க விடுவதிலேயே லாபம் காணும் அரசியலாளர்கள், ஊடகங்கள் எல்லாம் உண்டுதான்.

ஆனால் இளைஞர்கள்தான் முதலில் மீண்டு இதிலிருந்து வெளியே வரவேண்டும். எண்ணங்களையும் செயல்களையும் உரசி உரசிப் புடம் போட்டுக்கொள்ள வேண்டிய பருவம் இளமைப்பருவம். புதியன விரும்புதலும் புதுமை படைத்தலும் உற்சாகமுடன் தொற்றிக் கொள்வது இளைஞர்களிடத்தில்தான்.

எண்பது வயதுக் கிழவர் “இப்போது நான் மிகவும் யோக்கியனாகி விட்டேன்” என்று சொன்னால் அதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? அந்த வயதில் யோக்கியமாக இருந்துவிட்டுப் போவதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது?

வாலிபப் பருவம் அப்படியல்ல. வாழ்க்கையின் மீது பிடிப்பும், எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையுமே இளமையின் சொத்து. கையில் வைத்திருக்கும் காசை பஸ்ஸில் பிக்பொக்கெற் காரனிடம் பறிகொடுத்து விட்டாலும், சோகம் இல்லாமல், பிக்பொக்கெற் காரனின் சாமர்த்தியத்தை வியந்து பேசும் மனசு இருபதுகளின் வயது.

சமூகத்தின் மீதான கவனமும், அடுத்தவர்கள் பற்றிய அக்கறையும் கொண்டு, தவறான பழக்கங்கள் படிந்துவிடாமல் தங்களைத் தாங்களே உருவாக்கிக்கொள்ள வேண்டிய காலம் இளமைக்காலம். நம்மிடம் எந்தவிதமான தவறுகளும் இல்லை என்கிறபோது நம்மீது நமக்கே ஒரு மரியாதை வரும். நமக்கு நம்மை மதிக்கத் தோன்றும்.

நாம் யாருக்கும் தாழ்ந்தவர்களில்லை. அதுபோல, நம்மை விடத் தாழ்ந்தவர்கள் என்றும் யாருமில்லை. எல்லோரும் ஏதோ ஒருவகையில் முக்கியமானவர்களே.

நமக்குத் தெரியாதவற்றில் ஏதோ ஒன்று, இன்னொருவருக்குத் தெரிந்திருக்கலாம் என்ற உணர்விருந்தால், மோதல்கள் இல்லை காழ்ப்புகள் இல்லை வெறுத்து விலகுதல் இல்லை.

நம்மைச் சுற்றியிருப்பவர்களை நேசிப்பதும், மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமோ, அதை நாம் மற்றவர்களுக்குச் செய்வதும்தான் மகிழ்ச்சியைக் கொண்டுவரும்.

தங்களின் ஈகோவிற்கு எந்த அடியும் விழாதபடி மாற்றங்களைத் தேர்ந்தெடுப்பது என்பது இளைஞர்களால் மட்டுமே முடிந்த ஒரு காரியம். அதைச் செய்யுங்கள் இளைஞர்களே! மாற்றம்தான் பிரபஞ்சத்தின் தாளகதி.

- ஆசிரியர்

# மக்கள் தேடிக்கொண்டிருந்த மாற்று சக்தி எமது கட்சியே

### கூறுகிறார் சரத் பொன்சேகா

(கொழும்பு)

மக்கள் தேடிக்கொண்டிருந்த மாற்று சக்தி எமது கட்சியே எனவும் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மாத்தறை, வெலிகம - கனன்கே பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மந்தமான புத்தியுள்ள நாட்டில் ஆட்சியாளர் ஆசியாவின் ஆச்சரியம் பற்றி பேசினாலும் நாட்டில் அப்படியான எந்த ஆச்சரியமும் இல்லை.

ஆச்சரியம் என்பது என்ன என்பதும் ஆட்சியாளருக்கு தெரியாது. அப்படி இருக்கும் போது நாம் எப்படி ஆசியாவின் ஆச்சரியமாக முடியும்? நாட்டின் வருடாந்த தனி நபர் வருமானம் இரண்டாயிரம் டொலர்கள். முட்டாள்தனமான ஆட்சியாளர்களுக்கு இது புரியவில்லை.

எம்மைப் பொறுத்த வரை இனறைய ஆட்சியாளர் இன்னும் 5 ஆண்டுகள் நாட்டை ஆட்சி செய்தால், நாடு ஆசியாவின் நரகமாக மாறிவிடும். தற்பொழுது நாம் நரகத்தின் வாசலில் நிற்கின்றோம்.

எமராஜனும் அவரது தூதர்களும் மக்களை பயமுறுத்த காத்திருக்கின்றனர்.

நாட்டின் ஆட்சியாளர் கடந்த காலத்தில் விமானம் ஒன்றின் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இறங்கியதும் அங்கு கம்பளம் ஒன்று விரிக்கப்பட்டிருபபதை பார்த்து புரண்டு புரணடு கம்பளத்தை முத்தமிட்டார்.

அது தேசப்பற்று அல்ல மண்ணாசை பிடித்தவர்களும், மக்களை சுரண்டித் தின்பவர்களுமே மண்ணை முத்தமிடுவார்கள் என்றார்.

# ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகா தோற்பார் என்பதை அறிந்திருந்தோம்

### ஒப்புக்கொள்கிறார் அனுரகுமார திஸாநாயக்க

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா தோல்வியடைவார் என்பதை தமது கட்சி முன் கூட்டியே அறிந்திருந்ததாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆங்கில இணையத்தளம் ஒன்றுக்குவழங்கிய நேர்காணலில் அவர் இந்தத் தகவலை முதன் முதலில் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற சில தினங்களுக்கு முன்னர், நுவரெலியாவில் நடத்த பொதுக் கூட்டத்தின் பின்னர் பொன்சேகா தேர்தலில் தோல்வியடைவார் என்பதை நான், பொன்சேகா உள்ளிட்டவர்களுக்கு தெரியப்படுத்தினேன்.

அன்று நாட்டில் ஏற்பட்டிருந்த நிலைமை குறித்து எமக்கு தெளிவான நிலைப்பாடு இருந்தது. கம்பளை பொதுக் கூட்டம் முடிந்த பின்னர் நுவரெலியாவில் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

அதில் சரத்பொன்சேகா, ரணில் விக்ரமசிங்க, நான், விஜித ஹேரத் ஆகியோர் கலந்து கொண்டோம். ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் தோற போம் என்று நாங்கள் அப்போது கூறினோம்.

அத்துடன் உரிய முறையிலான அமைப்பு மற்றும் திட்டங்களை வகுத்தால் வெற்றி பெற முடியும் என்றும் நாங்கள் கூறினோம் என அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# நல்லொழுக்கமுள்ள சமூகத்தை உருவாக்கும் சவாலில் அரசாங்கம்

### அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

நல்லொழுக்கமுள்ள சமூகத்தை உருவாக்கும் சவாலை அரசாங்கம் எதிர்கொண்டுள்ளது. தோற்கடிக்க முடியாது என்று கூறிய விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை, இன்றைய அரசாங்கத்தினால் தோற்கடிக்க முடிந்துள்ளது என அமைசசர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மாலபே பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தோற்கடிக்க முடியாது’என்று கூறிய கொடிய பயங்கரவாதத்தை தோற்கடித்தது போல், 4 வருடங்களில் ஆச்சரியமிக்க பௌதீக அபிவிருத்திகளை செய்ய முடிந்தது போன்று, ஒழுக்கமான குணாதிசயங்களை கொண்ட சமூகத்தை உருவாக்கும் சவாலையும் இன்றைய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளது.

நாட்டின் நல்லொழுக்கம் சரியாக இல்லை என சிலர் கண்ணீர் விடுகின்றனர். அண்மைக் காலத்தில் இந்த நிலைமை ஏற்பட்டது போல் அவர்கள் கூறுகின்றனர்.

1977 ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் பொருளாதார தடையின்றி நாட்டுக்குள் வந்தது போன்று நல்லவைகளும், கெடுதியானவைகளும் நாட்டிற்குள் வந்தன.

ஆனால் கெடுதியானவையே அதிகளவில் வந்தது. அப்போது வந்த கெடுதியானவைகள் இன்று அதிகளவில் தென்பட ஆரம்பித்துள்ளன. நாடடில் யுத்தம் இல்லாத காரணத்தினால் ஏனைய சம்பவங்கள் பெரிதாகத் தெரிகின்றன.

கடந்த காலங்களில் நாட்டில் போர் நடந்து வந்ததால், நாட்டில் நடக்கும் கெடுதியான சம்பவங்களை வெளியிட ஊடகங்களுக்கு சந்தர்ப்பம் இருக்கவில்லை. இதனால் நாட்டில் நடக்கும் கெட்ட சம்பவங்கள் பற்றி அன்று அதிகமாக எவரும் பேசவில்லை என்றார்.

# ஆசைகளை ஒதுக்கிவிட்டு அரசியலில் இறங்கியுள்ளேன்

### இப்படிச்சொல்கிறார் ஹிருணிகா

எனது ஆசைகளை புறந்தள்ளி அரசியலில் ஈடுபட்டுள்ளேன். 26 வயதான யுவதி என்பதால் எனது வயதுக்கு ஏற்ற வகையில் களியாட்டங்களில் ஈடுபட ஆசை இருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேல் மாகாண சபை வேட்பாளர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

அவிசாவளை பிரதேசத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான் இன்னும் 26 வயதான யுவதி. 26 வயதான யுவதி என்பதால் எனக்கும் நண்பர்களுடன் வெளியில் செல்ல, மகிழ்ச்சியாக இருக்க ஆசை இருக்கின்றது.

ஆனால் அவை அனைத்தையும் விட்டு விட்டு, அரசியலை தேர்ந்தெடுத்தேன். எனது தந்தையின் அரசியல் அவரால் செய்ய முடியாது போன மற்றும் தவறிய பணிகளை என்னால் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது என்றார்.

## இராணுவத்தை வெளியேற்ற வேண்டும்?

# ஓர் உரையாடல்... 4

**யோகா-ராஜன் கட்டுரையிலிருந்து**

இதுவரைகாலமும் தமிழ் அரசியலில் சாணக்கியம் என்ற சொல்லுக்கு இடமிருந்ததாகக் கூற முடியாது! மகாபாரதத்தை தமது இதிகாசமாக ஏற்றுக்கொள்ளுகின்ற இந்தச் சமூகம் அதில் ஒரு சிறு துளியைக்கூட பிரயோகிக்கக் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. மாறாக புறநானூற்று வழியில் இண்டைக்கும் நெஞ்சில குத்துவாங்கிறதைத்தான் பெருமையாக நினைக்கிறது இந்தச் சமூகம்!

**யோகா:** புரட்சிகர சக்திகள் தம்மைக் கட்டமைப்பதற்கும் சரி, மக்களின் தன்னெழுச்சியான கிளர்ச்சிகளுக்கும் சரி இந்த ராணுவ இருப்பு தடையாக இருக்கும் என்பதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

**ராஜன்:** அது அப்பிடித்தான் இருக்கும்! அரச வன்முறை இயந்திரம் மிகப் பலமாக இருக்கிறது என்பதை உணர்ந்து புரட்சிகர சக்திகள் தந்திரோபாயங்களைக் கையாளவேண்டும்! ஆனால் இன்றைக்கு உலகத்தில் வன்முறைக்கூடாக புரட்சி சாத்தியமில்லை என்பதே எனது நிலைப்பாடு! அப்படி வன்முறைக்கூடாக நிகழ்ந்த புரட்சிகள் எதுவும் மக்களுக்கு எவ்வித அதிகாரங்களையும் வழங்கியதாக சரித்திரம் இல்லை! (இது பற்றி வேறொரு சந்தர்ப்பத்தில் உரையாடுவோம்) ஆனால் மக்களிடமிருந்து தன்னெழுச்சியாக வருகின்ற கிளர்ச்சிகளை நிராகரித்து விடமுடியாது! அப்படி வரும் மக்கள் எழுச்சிகளை ராணுவமோ பொலிஸ் படையோ தடுத்துவிடமுடியாது!

உதாரணத்துக்கு காணாமல் போனவர்களைத் தேடித்தரும்படி மக்கள் அடிக்கடி கிளர்ச்சி செய்கிறார்கள்! ராணுவத்தாலோ, பொலிசாலையோ எதுவும் செய்யமுடியாமல் இருக்கிறது! எமது மக்கள் புலி வழியிலான கட்டமைக்கப்பட்ட ராணுவ போராட்ட முறைகளை தவிர்ப்பதே புத்திசாலித்தனம்! மக்கள் தமது சூழலின் நிலைமைகளுக்கேற்ப இயல்பாகத் தம்மைக் கட்டமைத்துக் கொள்வார்கள்! ஆனால் அரசியல்வாதிகள் அதில் மூக்கை நுழைக்கின்ற போதுதான் பிரச்சினை பூதாகரமாகிறது! இதுவே யதார்த்தம்!

**யோகா:** ராஜன் இங்கு ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது. அதாவது இந்த ராணுவ சக்தியை தமிழ்ச் சூழலுக்குச் சாதகமான முறையில் அதன் வளர்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுத்துவது பற்றி எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?

தமிழரில் இருக்கக்கூடிய முன்னேறிய பிரிவினரின் துணிச்சலற்ற தன்மை! துரோகியாக்கப்பட்டு விடுவோமோ என்ற பயம்! இதனால் அவர்கள் தூரப்பார்வையற்று, இன்றைய தமிழ் அரசியல் நீரோட்டத்திற்கு ஏற்ப கருத்துக்களை உதிர்த்துவிட்டுப் போகிறார்கள்!

**ராஜன்:** நிச்சயமாக! அது இன்றும் நிகழ்ந்துகொண்டிருக்கு. ஆனால் மிகச் சிறிய அளவில். வன்னிப் பகுதிகளில் வீதியோரங்களைத்துப்புரவு செய்து இருமருங்கும் மரங்களை நட்டு, புற்கத்தைகளைப் பதித்து, பூச்செடிகளால் அழகுபடுத்துவதைப் பார்த்திருக்கிறேன். நீங்களும் பார்த்திருப்பீர்கள். அடிப்படையில் இன்று அதிகாரத்துக்குரியதாக இருக்கும் இந்த ராணுவத்தை தேவைக்குரிய ராணுவமாக மாற்றுகின்ற விடயம் இது!

இதைப் பாரிய அளவில் மேற்கொள்வதென்றால் ராஜதந்திர ரீதியில் உரையாடல்களை மேற்கொள்ளவேண்டும்! முதலில் சிங்கள அரசுத் தரப்புடனும், ராணுவத் தரப்புடனும் உரையாடவேண்டும். இன்றைக்கு தமிழ்த் தரப்பில் அதைச் செய்யக்கூடியவர்கள், தமிழ் அரசியல் தலைவர்களும் தமிழர் கூட்டமைப்பும்தான். மாகாண சபைகளையும் சேர்த்துக்கொள்ளலாம்.

அந்தவகையில், நன்னீர் வழங்குவதற்குரிய மிகப்பெரிய கட்டமைப்புக்களை இந்த ராணுவத்தின் மூலம் உருவாக்க முடியும். அதன் பொருட்டு மகாவலி கங்கையை வடபகுதிக்குத் திருப்புவது முதல், இரணைமடு போன்ற பல குளங்களை புனரமைக்கும் பணிகளில் ராணுவத்தை ஈடுபடுத்த முடியும்.

அதேபோல் இயற்கை அனர்த்தங்களுக்கு எதிராக வேகமாகச் செயற்படக்கூடிய ஒரு படைப் பிரிவை உருவாக்கி, நிவாரணங்களை துரிதமாக வழங்குவதற்கு வழி செய்ய முடியும்!

இன்னும், வேகமாக இயங்கக்கூடிய ஒரு தீயணைப்புப் படையை உருவாக்குவதற்கும் இந்த ராணுவத்தைப் பயிற்சிக்க முடியும்!

இவ்விதமான பெரும் கட்டுமானங்களை உருவாக்கும் நோக்கில் ராணுவத்தை நகர்த்துவதற்கு தமிழர்தரப்பு முன்வரவேண்டும்.

எம்மைத் தொல்லைப்படுத்துகின்ற நிலையில் இருந்து எமக்கு உதவுகின்ற முறைமைக்கு மாற்றுகின்ற ஒரு தந்திரோபாயம் இது! ஒன்றை நாங்கள் யோசிக்கவேண்டும். இந்த ராணுவம் எப்படியோ தரித்து நிற்கத்தான் போகிறது! நான் முன்குறிப்பிட்ட வழிகளில் அதுதான் எமக்கு பாதுகாப்பும்கூட!

"வன் புணர்ச்சியைத் தவிர்த்துவிட முடியாவிடின் அதன் வன்மத்தை யாவது தவிர்த்துவிடு" என்ற அண்மையில் வாசித்த ஒரு வாசகத்தின் ஊடாக நான் கண்ட உண்மை இது!

**யோகா:** ராஜன் இங்கு முக்கியமான இரண்டு விசயங்கள் பற்றி நாம் கவனிக்கவேண்டியிருக்கு! ஒண்டு தமிழர்களின் பொதுப்புத்தியில் உறைந்து போயிருக்கும் தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் இருந்து விலகி, சாணக்கியம் தந்திரோபாயம் என்ற அடிப்படையில் நாம் கருத்துக்களை முன்மொழிகின்ற போது ஏற்படக்கூடிய எதிர்வினை! மற்றது எங்களது முன்மொழிவுளை தமிழ்ச்சமூகம் விளங்கிக்கொள்ளுமளவுக்கு வளர்ச்சியடைய வில்லையா அல்லது விளங்கிக்கொள்ளத் தயாரில்லையா என்பது?

தமிழரின் பிரச்சினை மற்றவர்களோடு சேர்ந்து வாழக்கூடாது என்பதுதான்! மட்டக்களப்பான், தீவான், என்ன சாதி என்று பல்வகைகளில் பிரிச்சுப் பார்க்கிறதையே நோக்கமாகக் கொண்ட, ஓர் இழிநிலைச் சமூகம்தான் தமிழ்ச் சமூகம்! சக மனிதனுடன் இருக்கக்கூடிய உறவு நிலையுடன் அடையாளப் படுத்துவதற்குப் பதிலாக அவனுடன் இருக்கக்கூடிய பிளவுநிலைகளை வைத்து தன்னை அடையாளப்படுத்துகின்ற படு பிற்போக்குச் சமூகமாகத்தான் தமிழ் சமூகம் இந்த 21ஆம் நூற்றாண்டிலும் இருக்கிறது! இந்தச் சமூகம் எப்படி தன்னைச் சிங்களவனுடன் அடையாளப்படுத்திக் கொள்ளும்? முஸ்லீம்களுடன் கை கோர்த்துக் கொள்ளும்?



**ராஜன்:** அது உண்மைதான் மாஸ்ரர்! இதுவரைகாலமும் தமிழ் அரசியலில் சாணக்கியம் என்ற சொல்லுக்கு இடமிருந்ததாகக் கூறமுடியாது! மகாபாரதத்தை தமது இதிகாசமாக ஏற்றுக்கொள்ளுகின்ற இந்தச் சமூகம் அதில் ஒரு சிறு துளியைக்கூட பிரயோகிக்கக் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. மாறாக புறநானூற்று வழியில் இண்டைக்கும் நெஞ்சில குத்துவாங்கிறதைத்தான் பெருமையாக நினைக்கிறது இந்தச் சமூகம்!

இந்த நிலையில் தந்திரோபாய அடிப்படையிலான எமது கருத்துக்களால் நாம் துரோகிகளாகப் பார்க்கப்பட்டிருக்கிறோம்! இது தமிழ்ச் சமூகத்தில் இருக்கக்கூடிய மிக ஆரோக்கியமற்ற போக்கு! இதற்கு நாங்கள் பயப்பிடத் தேவையில்லை! இதில் ஒரு முரண்நகை என்னவெனில் ஆயிரக்கணக்கில் வாலிபங்களைப் போர்க் களத்துக்கு அனுப்பி சைனைட் குப்பியையும் விழுங்க வைத்துவிட்டு, வெள்ளைக் கொடிகளுடன் சென்று சரணடைந்த புலித் தலைமைகளை விட நாம் ஒன்றும் துரோகிகள் அல்ல என்பதுதான்!

இன்னொரு முக்கிய காரணம், தமிழரில் இருக்கக்கூடிய முன்னேறிய பிரிவினரின் துணிச்சலற்ற தன்மை! துரோகியாக்கப்பட்டு விடுவோமோ என்ற பயம்!இதனால் அவர்கள் தூரப் பார்வையற்று, இன்றைய தமிழ் அரசியல் நீரோட்டத்திற்கு ஏற்ப கருத்துக்களை உதிர்த்துவிட்டுப் போகிறார்கள்! ஆனால் எங்களுடைய நோக்கம் மக்களின் நீண்டகால நலன்தான்! அவர்களின் விருப்பமல்ல!

எங்கள் நோக்கம் நீண்டகால நோக்கில் மக்களின் நலன் பற்றிச் சொல்லிக் கொண்டு போவதுதான்!இந்தச் சமூகத்துக்கு என்ன பிடிக்கும், என்ன பிடிக்காது என்பது எங்கட பிரச்சனையல்ல! நாம் வலாற்றைச் சரியாகப் பார்க்கிறம். அதில் உண்மையும் நேர்மையும் இருந்தா போதும்! அவ்வளவுதான்!

இவர்களின் கருத்துக்களுக்காகச் சிந்திக்க வெளிக்கிட்டால், நாங்களே எங்களளவில் பொய்யர்கள்ஆகிவிடுவோம்! உண்மையைச் சொன்னால் தமிழரின் இந்தப் பெரிய பேரழிவுக்குக் காரணம் தமிழ்த்தேசியம்தான்! அன்று இடதுசாரிகள் சொன்னதைக் கேட்டு, ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் ஒரு தீர்வை அடைவதற்கு முயற்சித்திருந்தால் இப்படியொரு பேரிழப்பு நேர்ந்திருக்காது, தமிழரின் வாழ்வும் இன்னொரு உயர் தளத்தில் வைக்கப்பட்டிருக்கும்!

தமிழரின் பிரச்சினை மற்றவர்களோடு சேர்ந்து வாழக்கூடாது என்பதுதான்! மட்டக்களப்பான், தீவான், என்ன சாதி என்று பல்வகைகளில் பிரிச்சுப் பார்க்கிறதையே நோக்கமாகக் கொண்ட, ஓர் இழிநிலைச் சமூகம்தான் தமிழ்ச் சமூகம்! சக மனிதனுடன் இருக்கக்கூடிய உறவு நிலையுடன் அடையாளப்படுத்துவதற்குப் பதிலாக அவனுடன் இருக்கக்கூடிய பிளவுநிலைகளை வைத்து தன்னை அடையாளப்படுத்துகின்ற படு பிற்போக்குச் சமூகமாகத்தான் தமிழ் சமூகம் இந்த 21ம் நூற்றாண்டிலும் இருக்கிறது! இந்தச் சமூகம் எப்படி தன்னைச் சிங்களவனுடன் அடையாளப் படுத்திக் கொள்ளும்? முஸ்லிம்களுடன் கை கோர்த்துக் கொள்ளும்?

நாம் எப்போதாவது மலையகத் தமிழருடன் எம்மை அடையாளப்படுத்தியிருக்கிறோமா? எங்களுக்கு அவலம் வரும்போது மட்டும், ஆள்பலத்துக்காக மட்டும் அவர்களுடன் இணைகின்றோம்! கருணா வெளியேறிய போது கிழக்கு மக்கள் முழுமைக்கும் எதிரான பிரசாரத்தைத்தானே யாழ்ப்பாணத் தமிழர்கள் மேற்கொண்டார்கள்!

ஏன் இந்தியத் தமிழர்களுடன் கூட எங்கடை ஆக்கள் சேரப்போவதில்லை! சீமானும் வைகோவும் கூட, தேவை இருக்கு மட்டும்தான்! அப்புறம் அவர்களை வடக்கத்தையான் என்றுதான் நோக்கும்... இந்தச்சமூகம்!

இன்றும் அரசு யந்திரம் நிலைகொள்வதல்ல தமிழரின் பிரச்சினை! இவர்களின் பிரச்சினை சிங்கள ராணுவம், இருப்பதுதான்!

பிளந்து, பிளந்து பிளந்து பார்ப்பது தான் தமிழ்ச் சமூகம்!

# தெற்கு வாழ் மக்களையும் திசைதிருப்ப சர்வதேசம் சூழ்ச்சி

## ஜனாதிபதி கவலை

பல்வேறு வகையிலும் எமது நாட்டின் விவகாரங்களில் தலையிட்டுவரும் சர்வதேச சக்திகள் தற்போது தெற்கு மக்களின் மனித உரிமையும் மீறப்படுவதாக கூறி அவர்களையும் தவறான வழியில் திசைதிருப்ப ஜெனிவாவிலிருந்து சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து உடுகம நகரில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் தேயிலைக்கு சிறந்த விலையினை வழங்கி வருகின்றோம். இத்துறைகளைப் பாதுகாப்பது மக்களின் பொறுப்பாகும். மழை, வெள்ளம் காரணங்களினால் பாதிக்கப்படும் தேயிலையைப் பாதுகாக்க நாம் தொடர்ந்தும் நிதியினை வழங்கி வருகின்றோம். ரப்பர் மற்றும் தேயிலை ஊடான பொருளாதாரத்தை மென்மேலும் முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

அத்துடன், இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் நாம் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டுள்ளோம்.

தற்போது வெளிநாட்டுச் சக்திகள் எமது உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு வருகின்றன. இவர்கள் மனித உரிமை மீறப்படுவதாகக் கூறி வருகின்றனர். வடக்கு மக்களின் மனித உரிமைகள் தொடர்பில் மட்டும் குரல் எழுப்பினால் தெற்கு மக்களின் ஆதரவை பெறமுடியாமல் போகும் என நினைத்து செயற்படும் அவர்கள், இப்போது தெற்கு மக்களின் மனித உரிமையும் மீறப்படுவதாக ஒரு புரளியை ஏற்படுத்தி வருகின்றனர்.



அப்போது தான் அமெரிக்கா, இங்கிலாந்து போன்றவற்றின் ஆதரவை பெற்றுக்கொள்ள முடியும் எனக் கருதியே அவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர் என்றார்.

## கைதான பிச்சைக்காரர்களை தடுப்பு முகாமுக்கு அனுப்ப உத்தரவு

கொழும்பு மாநகரின் பொது இடங்களில் பிச்சையெடுத்தமைக்காக கைதான 60 பிச்சைக்காரர்களை ரிதிகம தடுப்பு முகாமிற்கு அனுப்பிவைக்குமாறு கொழும்பு, கோட்டை நீதவான் திலினி கமகே உத்தரவிட்டுள்ளார்.

மூன்று மணித்தியாலங்கள் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் பெண்களும், 10 வயதுக்கு உட்பட்ட சிறார்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

புறக்கோட்டை, மருதானை, மாளிகாவத்தை, வாழைத்தோட்டம் மற்றும் கொம்பனித்தெரு பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இந்தத் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு கைது செய்யப் பட்டவர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யீப் பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## பெண்ணாக மாறிய ஆண் கைது

இரண்டு மனித படுகொலைகளுடன் தொடர்புடையதாக தேடப்பட்டுவந்த மிரிஹானையை வதிவிடமாக கொண்ட சந்தேகநபர், தாய்லாந்துக்கு சென்று பால் அறுவைச் சிகிச்சையின் மூலம் பெண்ணாக மாறி இலங்கைக்கு வந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளதாக ஹோமாகம பொலிஸார் தெரிவித்தனர்.

## தோடம்பழங்களுக்குள் மறைத்து ஹெரோயின் கடத்தல்



தோடம்பழங்களுக்குள் சூட்சமமான முறையில் மறைத்து பல இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை இலங்கைக்கு கொண்டுவந்த பாகிஸ்தான் பிரஜை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.


சந்தேகநபர் 12 தோடம்பழங்களுக்குள் ஹெரோய்ன் போதை பொருளை மறைத்து பாகிஸ்தானின் கராச்சி விமான நிலையத்தலிருந்து போதைப் பொருளை இலங்கைக்கு எடுத்து வந்துள்ளார்.

ஒரு தோடம்பழத்திற்குள் 80 கிராமுக்கு மேல் ஹெரோயின் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய சந்தேகநபரிடமிருந்து சுமார் ஒரு கிலோகிராம் எடையுள்ள ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி 10 மில்லியன் ரூபாவென மதிப்பீடு செய்யப்படடுள்ளது என்றார்.

## நுரைச்சோலையில் பரீட்சார்த்த மின் உற்பத்தி



நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தை விரைவில் மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்தின் டேர்பயினில் ஏற்பட்ட கோளாறு இதுவரையில் சீர் செய்யப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம்,- முதல் கட்ட பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்காக மீண்டும் செயற்படுத்தப்பட்டுள்ளது. மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக தற்போது 200 மெகா வோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடிவதாக, இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளரும், வர்த்தக மற்றும் நடவடிக்கை பிரிவின் பிரதி பொதுமுகாமையாளருமான செனஜித் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்காகவே நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் மீண்டும் செயற்படுத்தப்பட்டுள்ளது.

தேவை ஏற்படும் பட்சத்தில் மின் உற்பத்தி நிலையத்தை செயழிலக்கச் செய்யும் எண்ணத்துடனேயே சோதனை பரீட்சார்த்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 9 பிரதான தேர்தல் கூட்டங்கள் ஜனாதிபதி தலைமையில் இடம்பெறும்

### அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் எதிர்வரும் மார்ச் 7 ஆம் திகதி முதல் ஆரம்பமாகின்றன. ஜனாதிபதி 9 பிரதான தேர்தல் பிரசார கூட்டங்களில் கலந்து கொள்வார் என அமைச்சர் டலஸ அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண மற்றும் தென் மாகாண தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் அவர் மேலும் தெரிவிகைகையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்துவிட்டது. மேல், மற்றும் தென்மாகாணங்களிலுள்ள 6 மாவட்டங்களிலும் 4617 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. இந்த 4617 கிராம சேவகர் பிரிவுகளிலும் 4617 கிராமிய மக்கள் சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, 97 உள்ளூராட்சி சபைகள் மட்டத்தில் 97 தேர்தல் பிரசாரக் கூட்டங்களும், 57 தேர்தல் தொகுதியிலும் 57 தேர்தல் பிரசார கூட்டங்களும் நடத்த கடசி திட்டமிட்டுள்ளது. தற்போது கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் சுமார் 200 மக்கள் சந்திப்புகளை பூர்த்தி செய்துள்ளோம்.

இதேவேளை, வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இது இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படும்.

முதற்சுற்று பெப்ரவரி 22, 23 ஆம் திகதிகளிலும், இரண்டாம் சுற்று மார்ச் 8 மற்றும் 9 ஆம் திகதியும் நடாத்தப்படும் என்றார்.

## தென் ஆசியாவின் மூதாட்டி “உக்குஅம்மா” 117 வயதில் மரணம்



தென் ஆசியாவின் வயது கூடிய பெண்ணாக கருதப்படும் மாவனல்லை ஹெம்மாத்தகம பலத்கமு பிரதேசத்தைச் சேர்ந்த உக்கு அம்மா தனது 117 ஆவது வயதில் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார். 1897 ஆம் ஆண்டு பிறந்த உக்கு அம்மாவுக்கு 7 பிள்ளைகள் உள்ளனர். அதில் 5 பிள்ளைகள் மாத்திரமே தற்போது உயிருடன் உள்ளனர்.

உக்கு அம்மாவின் கணவரான பண்டியா 111 ஆவது வயதில் கடந்த சில வருடங்களுக்கு முன்பு இறந்துள்ளார். தற்போது அவரின் குடும்பத்தில் 98 பேர் வாழ்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி உக்கு அம்மாவின் மறைவையடுத்து அவரின் இல்லத்திற்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கணக ஹேரத் மற்றும் அதிகாரிகள் உக்கு அம்மாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## ஆட்சியைக் கைப்பற்றுவது மட்டுமே எதிர்க்கட்சிகளின் குறியாகும்

### அமைச்சர் சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

பிரதான எதிர்க் கட்சிகள், ஐரோப்பிய நாடுகள் மற்றும் தமிழ் நாட்டுடன் இணைந்து எப்படி நாம் ஆட்சியை கைப்பற்றலாம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கின்றன என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை நிறைவேற்ற வேண்டும் எனக் கூறிக்கொண்டு சர்வதேச ரீதியாக பல அழுத் தங்களை இலங்கை மீது பிரயோகித்தாலும் அவர்களின் உள்நோக்கம் வேறொன்றாகவே உள்ளது.

அமெரிக்கா போன்ற நாடுகள் மத்திய கிழக்கு நாடுகளில் செய்த தலையீடுகள் பற்றி நன்கு நாம் அறிவோம். அதேபோன்று இலங்கையிலும் தங்களது பலத்தை பிரயோகிக்க எடுக்கும் முயறசிக்கு அனைத்து மக்களும் இடமளிக்கக் கூடாது.

1970 களில் ஆட்சிக்கு வந்த அரசு நல்ல ஆட்சியை கொண்டு சென்றது. ஆனால் கட்சிக்குள் ஜனநாயக உரிமை இல்லாததன் காரணமாக ஆட்சி கலைக்கப்படவேண்டி வந்தது. 17 வருடங்கள் ஆட்சிக்கு வரமுடியாமலும் போனது.

இதேபோன்று அடுத்துவந்த அரசுக்குள்ளும் உள்ளக ஜனநாயகம் இல்லாத காரணத்தினாலேயே 20 வருடங்கள் இன்னமும் ஆட்சிக்கு வர முடியாமல் உள்ளன என்றார்.

# புதுக்குடியிருப்பு, விசுவமடு சந்தைகள்

# நவீன முறையில் புனரமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு விசுவமடு ஆகிய பொதுச் சந்தைகள் எதிர்காலத்தில் நவீன முறையில் அமைக்கப்படுமென முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவியாளர் ந.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் விசுவமடுப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு மேற்படி சந்தைகளின் அபிவிருத்திகள் பற்றி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேற்றத்தின் பின்னர் பாரிய இரண்டு அபிவிருத்தித் திட்டங்கள் அதாவது "நெல்சிப், என்றிப்" ஆகிய திட்டங்களின் ஊடாக அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. துரதிஸ்ர வசமாக இந்த இரண்டு சந்தைகளும் இவ் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படவில்லை காரணம் இவ்விரண்டு பகுதிகளிலும் மீள்குடியேற்றம் தாமதமாக மேற்கொள்ளப்பட்டதால் அபிவிருத்திகளிற்குள் உள்வாங்கப்படவில்லை. ஆனால் மேற்படி திட்டங்களில் ஏனைய சந்தைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. அதாவது துணுக்காய், மல்லாவி, ஒட்டு சுட்டான் ஆகிய சந்தைகள் அமைக்கப்பட்டுள்ளன. மாங்குளம் சந்தை அமைப்பதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவித்த அவர் புதுக்குடியிருப்பு, விசுவமடு ஆகிய சந்தைகள் எதிர்காலத்தில் நவீன முறையில் அமைக்கப்படவுள்ளன.

அதற்குரிய திட்டங்கள் தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (கே)



நெல்லியடி பகுதியில் அமைக்கப்படவுள்ள நவீன சந்தைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் வேலுப்பிள்ளை சிவயோகன் அடிக்கல் நாட்டி வைப்பதைக் காணலாம். (18)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சில முக்கிய தீர்மானங்களும், முடிவுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

அன்று நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்திற்கு சமூகமளிப்பதன் மூலம் தொடர்ந்தும் உறுப்பினராக அங்கம் வகிப்பதற்கு தகுதியுடையவராவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (105)

## சிரமதானம்

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தினால் வளர்மதி முன்பள்ளி அமைந்துள்ள சூழலில் துப்புரவாக்கும் சிரமதானப் பணிகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டன.

இப்பணியில் சனசமூக நிலைய அங்கத்தவர்கள், பெற்றோர்கள் இணைந்து மேற்கொண்டனர்.

முன்பள்ளி மாணவர்களின் மகிழ்ச்சியான கற்றலுக்கு வழிவகுக்கும் வகையில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதாக நிலையத் தலைவர் தெரிவித்தார். (51)

## யசிந்தா றோ.க.த.க.பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(மானிப்பாய்)

மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகம், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஏற்பாட்டில் சுவிஸ் பபிக்கோன் தமிழர் ஒன்றியத்தின அனுசரணையில் மாணவர்களுக்கான கற்றல் ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக பண்டத்தரிப்பு யசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் ஊக்குவிப்புக்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டன.

இதன்போது மாணவர்களுக்கான பாதணிகள், கற்றல் உபகரணங்களும் பாடசாலை மேலைத்தேய பான்ட் வாத்தியக் குழுவிற்காக ஸிம்பல் என்பனவும் வழங்கிவைக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேரிலாசர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர் திருமதி எஸ்.ஈ.பீரிஸ், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிஸ்கோ அமைப்பின் தலைவர் அ.டொன்சிங், மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தலைவர் அ.கீர்த்தனா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான ஊக்குவிப்புக்களை வழங்கி வைத்தனர்.

இச் செயற்றிட்டம் மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் இவ்வாண்டிற்கான இரண்டாவது செயற்றிட்டமாகும். (48)

ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர் தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்...

13. 02. 2014

- கிளிநொச்சியில் பல்கலை வளாகம் அமைச்சர் டக்ளஸ் சாதனை
- சர்வதேச போர்க்குற்றங்கள்... பகுதி - 2
- கிழக்கில் மீள்குடியேற்றம் நிறைவடைந்ததா?
- ஜெனிவா கூச்சல் தலைநிமிர வழி செய்யுமா?
- தற்கொலை மரணங்களும் உண்டாகும் பாதிப்புக்களும்...






நட்சத்திர மோதல்

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்...

சூடு - சுவை - சுவாரசியம் - இதுதான் தினமுரசு

# ஏழாவது ஐ.பி.எல். இன்று வீரர்கள் ஏலம்

(பெங்களூர்)

7ஆவது ஐ.பி.எல். போட்டிக்கான வீரர்கள் ஏலம் பெங்களூரில் இன்று நடைபெறவுள்ளது.

ஏலப்பட்டியலில் 519 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இதில் சர்வதேச வீரர்கள் 219 பேர். மற்றும் 169 பேர் இந்தியர்கள். மீதியுள்ள 50 பேர் வெளிநாட்டைச்சேர்ந்தவர்கள். முதல் தர போட்டியில் விளையாடிய 292 பேர் இடம் பெற்றுள்ளனர்.

ஜெயவர்த்தன, கலிஸ், பீற்றர்சன் மற்றும் இந்திய வீரர்களான சேவாக், யுவராஜ்சிங் உட்பட 31 பேருக்கும் அடிப்படை விலையாக 2 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதற்கு அடுத்தபடியாக ஒரு கோடி அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

குறைந்த பந்தில் சதம் அடித்த நியூசிலாந்து வீரர் கோரி அண்டர்சனுக்கு மவுசு அதிகமாக இருக்கும். எந்த வீரர் அதிக விலைக்கு போவார்கள் என்பது இன்றைய ஏலத்தில் தெரியவரும்.

# இன்றைய ஆட்டங்கள்

(சிட்டகொங்)

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 தொடரின் முதல் ஆட்டம் இன்றைய தினம் பங்களாதேஷின் சிட்டகொங்கில் நடைபெறவுள்ளது.

(சென்சூரியன்)

தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் இன்றைய தினம் தென்னாபிரிக்காவின் சென்சூரியனில் நடைபெறவுள்ளது.

# மாபெரும் கால்பந்தாட்டம் யாழ். ஜின்னாவில் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடாத்தும் அணிக்கு ஒன்பது பேர் கொண்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடர் நாளை யாழ். ஜின்னா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடரின் அரையிறுதிப் போட்டிகள் எதிர்வரும் 15ஆம் திகதியும், இறுதிப் போட்டி 16ஆம் திகதியும் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நாளை நடைபெறவுள்ள போட்டிகளில் கலைவாணி அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணியும், ஊரெழு றோயல் அணியை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனீஸ் அணியும் மோதவுள்ளன.நாளை மறுதினம் நடைபெறும் போட்டிகளில் சென். மைக்கல் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணியும், நாவாந்துறை சென். நிக்கலஸ் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணியும் மோதவுள்ளன. இப்போட்டிகள் யாவும் மாலை 4. மணி முதல் நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (105)



## ருவென்ரி-20 உலகக் கிண்ணம் ஆஸி. அணியில் பிரட் ஹொக்

(மெல்போர்ன்)

உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடருக்கான அவுஸ்ரேலிய அணியில் 43 வயதான பிரட் ஹொக் இடம்பிடித்துள்ளார்.

ருவென்ரி-20 உலக கோப்பை கிரிக்கெட் போட்டி மார்ச் 16ஆம் திகதி முதல் ஏப்ரல் 6ஆம் திகதி வரை பங்களாதேஷில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 43 வயதான பிரட் ஹொக் மற்றும் ஹோட்ஜே ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

அவுஸ்ரேலிய அணி விபரம்: பெய்லி (கப்டன்), வோர்னர், வட்சன், வைட், கிறிஸ்டியன், கோல்டர், போல்க்னர், ஆரோன் பிஞ்ச், ஹடின், பிரட் ஹொக், ஹோட்ஜே, மைக்ஸ்வெல், ஜோம்ஸ், ஜோன்சன், ஸ்டார்க்.

## பாக். கிரிக்கெட் சபைத் தலைவர் அதிரடி நீக்கம்



(லாகூர்)

நிதி மோசடி தொடர்பில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஸகா அஷ்ரவ் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

கிரிக்கெட் தொடர்பில் பாகிஸ்தானின் நிலைப்பாடுகளை தவறாகப் புரிந்து கொண்டமை மற்றும் நிதியை தவறாக கையாண்டமை உள்ளிட்ட குற்றச் சாட்டுக்களை அடுத்து ஸகா அஷ்ரவை உடனடியாக நீக்குமாறு அந்த நாட்டுப் பிரதமர் நவாஸ் ஷெரிப் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை சர்வதேச கிரிக்கெட் பேரவையின் மறுசீரமைப்பு நடவடிக்கை தொடர்பில் நவாஸ் ஷெரீப்புடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகவே ஸகா அஷ்ரப் நீக்கப்பட்டிருக்கலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, தான் நீக்கப்பட்டது குறித்து தற்போது கருத்து எதுவும் கூற முடியாது. இதற்கு காலம் பதில் செல்லும் என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு ஸகா அஷ்ரப் பதிலளித்துள்ளார்.

## இல்ல மெய்வல்லுநர்

(யாழ்ப்பாணம்)

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் யோ. ஜெகஆனந்தம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக கல்வி காருண்யன் தொழிலதிபர் இ.ச.பெ. நாகரத்தினம், சிறப்பு விருந்தினராக கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் சி.வி.க. றமேஸ்நேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு போட்டியாளர்களுக்கு உற்சாகமூட்டுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (42)

# வெண்கலம் வென்றவருக்கு சங்கடத்தை ஏற்படுத்திய "சிப்"



(சோச்சி)

ரஷ்யாவிலுள்ள சோச்சி நகரில் குளிர் கால ஒலிம்பிக் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் ஸ்கேட்டிங் விளையாட்டில் கலந்துகொண்ட ரஷ்யா வீராங்கனை ஓல்கா கிராப் தனது மேலாடையின் சிப்பை சரியாக அணியாமல் விளையாடிவிட்டார். இது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

வீராங்கனை உள்ளாடை எதுவும் அணியாமல் அவ்வாறு விளையாடியது எல்லோரையும் முகம் சுழிக்க வைத்தது.

ஆனால் வீராங்கனையோ ஸ்கேட்டிங் 3000 மீற்றர் விளையாட்டில் வெண்கலப் பதக்கம் வென்றார். தனது மேலாடையின் சிப் சரியாக மூடப்படாதது தெரியாமலேயே வீராங்கனை மிகவும் ஆர்வமாக விளையாடியுள்ளார். பின்னர் உணர்ந்து கொண்டு விரைவாக சிரித்துக் கொண்டு சிப்பை சரியாக மூடி கொண்டார்.

இது தொடர்பாக வீராங்கனை பேசுகையில் இந்த வீடியோ ஒருவேளை யூடியூப்பில் வெளியாகலாம்.

ஆனால் இது மிகவும் வருத்தமாக அமையும் என்று நான் எண்ணவில்லை என்று கூறியுள்ளார்.

இதற்கிடையே பதக்கம் வென்ற அந்த வீராங்கனையை ரஷ்ய நாட்டு அதிபர் விளாடிமீர் புட்டீன் பாராட்டியுள்ளார்.

# இயன் மோர்கன் விலகல்

(லண்டன்)

ஐ.பி.எ்ல். கிரிக்கெட் போட்டியில் இருந்து இங்கிலாந்து அதிரடி வீரர் இயன் மோர்கன் விலகியுள்ளார். இங்கிலாந்து அணியில் இருந்து கெவின் பீற்றர்சன் திடீரென ஓய்வு பெற்ற நிலையில் அவர் விட்டுச்சென்ற இடத்தைப் பிடிப்பதில் தீவிர கவனம் செலுத்துவதற்காக மோர்கன் இந்த முடிவை எடுத்துள்ளார்.

ஐ.பி.எல். போட்டிக்கான ஏலம் இன்று பெங்களூரில் நடைபெறவுள்ள நிலையில், தனது விலகல் குறித்து டுவிட்டரில் கருத்துத் தெரிவித்துள்ள மோர்கன், என்னுடைய விலகலை ஏற்றுக்கொண்ட ஐ.பி.எல். நிர்வாகத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஐ.பி.எல். போட்டிக்கு எனது வாழ்த்துக்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்து அணியில் பீற்றர்சன் விட்டுச்சென்ற இடத்தைப் பிடிப்பதில் தீவிரமாக உள்ள இயன் மோர்கன் கவுண்டி போட்டியில் மிடில்செக்ஸ் அணிக்காக விளையாட முடிவு செய்துள்ளார். 2012இன் தொடக்கத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடிய மோர்கனுக்கு, அதன்பின்னர் கடந்த 2 ஆண்டுக்ளாக டெஸ்ட் அணியில் இடம் கிடைக்கவில்லை.



7ஆவது ஐ.பி.எல். போட்டியில் விளையாடவிருந்த இங்கிலாந்து அணியின் ஒப்பந்த வீரர்கள் இருவரில் ஒருவர் மோர்கன்,மற்றொருவர் இயன் பெல் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஐ.பி. எல். போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடிய மோர்கன், 14 போட்டிகளில் 307 ஓட்டங்கள் குவித்தார். எனினும் கொல்கத்தா அணி இந்த முறை அவரை தக்கவைக்கவில்லை. ஐ.பி.எல். ஏலத்துக்கு அவருடைய அடிப்படை விலை 1.5 கோடியாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, அவுஸ்ரேலிய அணியின் விக்கெட் காப்பாளர் ஹடின் குடும்ப சூழ்நிலையை காரணம் காட்டி ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகியுள்ளார்.

# இந்திய அணி அறிவிப்பு இசாந்த் சர்மா நீக்கம்

(பெங்களூர்)

ஆசியக் கிண்ணம் (பெப்ரவரி 25ஆம் திகதி முதல் மார்ச் 8ஆம் திகதி வரை) மற்றும் ருவென்ரி-20 உலக கோப்பை போட்டி (மார்ச் 16ஆம் திகதி முதல் ஏப்ரல் 6ஆம் திகதி வரை) பங்களாதேஷில் நடைபெறவுள்ளது. இப்போட்டித் தொடருக்கான இந்திய அணி பெங்களூரில் நேற்று தேர்வு செய்யப்பட்டது.

ஆசிய கோப்பை கிரிக்கெட் அணியில் சுரேஷ் ரெய்னாவுக்கு இடம் கிடைக்கவில்லை. இசாந்த் சர்மா இரண்டு போட்டித் தொடர்களிலிருந்தும் நீக்கப்பட்டார். யுவராஜ் சிங் ருவென்ரி-20 உலகக்கோப்பை போட்டியில் இடம்பெற்றுள்ளார்.

ஆசியக் கிண்ணப் போட்டிக்கான அணியில் இடம்பெற்ற வீரர்கள் விபரம்:-

டோனி (கப்டன்), தவான், ரோகித் சர்மா, ஹோலி, புஜாரா, அம்பதி ராயுடு, ராகானே, ரவீந்திர ஜடேஜா, அஸ்வின், புவனேஸ்வர் குமார், மொகமட் சமி, வருண் ஆரோன், பின்னி, மிஸ்ரா, ஈஸ்வர் பாண்டா.



ருவென்ரி-20 உலகக்கோப்பைக்கான அணியில் இடம் பெற்ற வீரர்கள் விபரம்:-

டோனி (கப்டன்), தவான், ரோகித் சர்மா, ஹோலி, சுரேஷ் ரெய்னா, யுவராஜ் சிங், ரகானே, ரவீந்திர ஜடேஜா, புவனேஸ்வர் குமார், மொகமட் சமி, பின்னி, மிஸ்ரா, மோகித் சர்மா, வருண் ஆரோன்.

# இல்ல மெய்வல்லுநர்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.தவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக கற்கைகள் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.ரமேஷ், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ம.சந்திரகுமார், ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளரும், வலி. தென் மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், கௌரவ விருந்தினர்களாக பாடசாலை நிறுவுனரின் துணைவியார்திருமதி கந்தையா, பாடசாலை முன்னாள் ஆசிரியர் க.கௌரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (48)

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுர் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி மேரி லாசர் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முகராஜா, சிறப்பு விருந்தினராக பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி. ஏ.பேர்ணாட்ஷா, கௌரவ விருந்தினராக பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (48)

(யாழ்ப்பாணம்)

சென். ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மதியம் 12.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி நிகழ்வு வித்தியால்ய அதிபர் அருட் சகோதரி ஜிவந்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பெற்றோர், கிராமப்பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் என அனைவரையும் கலந்துகொண்டு வீர, வீராங்கனைகளுக்கு உற்சாகமூட்டுமாறு பாட சாலைச் சமூகம் கேட்டுள்ளது. (எஸ்.பி.)


(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி நவலக்ஷ்மி சந்திரகுமார்தலைமையில் நடைபெறவுள்ளஇப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜா, கௌரவ விருந்தினர்களாக ஆனைக்கோட்டை அடைக்கலமாதா தேவாலய பங்குத்தந்தை வண. பிதா யோ.ப.ஜோதிநாதன் அடிகளார், வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி.கோ.குகபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (48)

# கனகரத்தினம் மத்திய ம.வி. மெய்வல்லுநர்
# முதலிடம் கனகரத்தினம் இல்லம்





(யாழ்ப்பாணம்)

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டியில் கனகரத்தினம் இல்லம் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

வீர,வீராங்கனைகள் நான்கு இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றன. இதில் கனகரத்தினம் இல்லம் 490 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், பெரேரா இல்லம் 416 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், சோமசுந்தரம் இல்லம் 356 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும், அருளம்பலம் இல்லம் 263 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் ஒருவர் சம்பியன்களாகத்தெரிவு செய்யப்பட்டனர். ஆண்கள் பிரிவின் 13 வயதுப் பிரிவில் எஸ். வினோஜன், 15 வயதுப் பிரிவில் கே. ஹரிகரன், 17 வயதுப் பிரிவில் ரி. பானுகோபன், 19 வயதுப் பிரிவில் ஜி. விதுஷன், 21 வயதுப் பிரிவில் கே. உதயசபேசன் ஆகியோரும், பெண்கள் பிரிவின், 13 வயதுப் பிரிவில் எம். சிந்துஜா, 15 வயதுப் பிரிவில் எஸ். கஜனி, 17 வ்யதுப் பிரிவில் ஏ. நாகலோஜினி, 21 வயதுப் பிரிவில் எஸ்.ஜெசிக்கா ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

வித்தியாலய அதிபர் எஸ். இளங்கோ தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், சிறப்பு விருந்தினராக யாழ். கோட்டக் கல்வி அதிகாரி சண்முககுமார் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றியீட்டியோருக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். (எஸ்.பி.)

## விளையாட்டு செய்திகள்

# ஹொக்கிச் சங்கத்தில் மேலும் 3 பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தில் மேலும் 3 புதிய பாடசாலை அணிகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் செயலாளர் பா.தர்மகுமாரன் தெரிவித்தார்.

தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட ஸ்ரீ நயினாதீவு கணேசா மகாவித்தியாலயம், வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட மானிப்பாய் சர்வதேச பாடசாலை, சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி ஆகிய பாடசாலைகளே புதிதாகஇணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக செயலாளர் மேலும் தெரிவித்தார்.

ஏற்கனவே யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தில் உடுவில் மகளிர் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், பண்டத்தரிப்பு பெண்கள்உயர்தரப் பாடசாலை, குளமங்கால் ஜி.ரி.எம்.எஸ், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென். ஜோண்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆகிய 9 பாடசாலைகள் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மென்பந்து கிரிக்கெட்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் மைய றோட்டரக்ட் கழகம் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

அணிக்கு 6 பேர் 5 ஓவர்கள் கொண்டதாக இப்போட்டி நடாத்தப்படவுள்ளது.

போட்டிகள் எதிர்வரும் 14,15ஆம் திகதிகளில் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் அணிகளை இன்று மாலைக்குள் 0772949554 அல்லது 0774158991 அல்லது 0771738095 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (48)

# நிருபன், மதுஷன் சகலதுறையில் ஜொலிப்பு
# யாழ். மத்திய கல்லூரி பெரு வெற்றி

மதுஷன், நிருபன் ஆகியோரின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 147 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. யாழ். மத்திய கல்லூரி மற்றும் யாழ். இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டிகடந்த 9,10ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி நிரோஜன், சஞ்சஜன், நிருபன், மதுஷன், ஆகியோரின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில்யாழ்.மத்திய கல்லூரி அணிமுதல் இனிங்ஸிற்காக 74 ஓவர்க்ளை எதிர்கொண்டு எட்டு விக்கெட்டுக்களை இழந்து 356 ஓட்டங்களைப் பெற்ற வேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் நிரோஜன் 50 பந்துகளை எதிர்கொண்டு 13 பவுண்டரிகள் அடங்கலாக 70, சஞ்சஜன் 97 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 58, நிருபன் 58 பந்துகளை எதிர்கொண்டு 10 பவுண்டரிகள் அடங்கலாக 54, மதுஷன் 50, யூலியஸ் கனிஷ்டன் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பானுகோபன் 119 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி மதுஷன், சௌமிதரன் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் யாழ். இந்துக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கஜன் 31, சிந்துஜன் 29, பானுகோபன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் மதுஷன் 36 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, சௌமிதரன் 33 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

யாழ். இந்துக் கல்லூரி அணி 233 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்தமையால் போலோன் முறையில் ஆட யாழ். மத்திய கல்லூரி அணியால் பணிக்கப்பட்டது. இதற்கமைய இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி நிருபனின் சுழற்பந்து ஜாலத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் விரைவாகப் பறிகொடுத்தது. இறுதியில் யாழ். இந்துக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கஜன் 27 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் நிருபன் 45 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு, மதுஷன் 25 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 147 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (எஸ்.பி.)

# வலய மட்ட பெருவிளையாட்டு வடமராட்சியில் ஆரம்பம்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் முதல் நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் இன்றைய தினம் ஆண்களுக்கான கரம் போட்டி பருத்தித்துறை மத்திய மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் 15 மற்றும் 19 வயதுப் பிரிவு அணிகள் மோதவுள்ளன. இதேவேளை, 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி இன்று காலை 8.00 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, நாளைய தினம் காலை 8.30 மணிக்கு பெண்களுக்கான கரம் போட்டி பருத்தித்துறை மத்திய மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் 15 மற்றும் 19 வயதுப் பிரிவு அணிகள் மோதவுள்ளன.

எதிர்வரும் 16ஆம் திகதி ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்திலும், 19ஆம் திகதி ஆண், பெண்களுக்கான எல்லே போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் ஆண்களுக்கான எல்லே போட்டி மனோகரா விளையாட்டு மைதானத்திலும், பெண்களுக்கான எல்லேப் போட்டி நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஆண், பெண்களுக்கான எறிபந்துப் போட்டி நேற்று முன்தினம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் 19 வயதுப் பிரிவு அணிகள் மோதியமை குறிப்பிடத்தக்கது. (93)

6


‘சாத்திரி’ எனப்படும் ஸ்ரீகௌரிபால் புலிகளின் சர்வதேசப் பிரிவின் முக்கியஸ்தர்களில் ஒருவராக இருந்தவர். ஆரம்பத்தில் புலிகள் அமைப்பில் வெடி பொருள் பிரிவில் பணியாற்றியதால் ‘சக்கை சியாம்’ என அழைக்கப்பட்டவர். தற்சமயம் ‘சாத்திரி’ என்கிற புனைபெயரில் எழுத்துலகில் அறியப்படுபவர்.

பேட்டி கண்டவர்: அருளினியன்

# சாத்திரி பேசுகிறேன்

**பிரான்சில் புலிகளின் பொறுப்பாளராக இருந்த பரிதி என்கிற றேகனைக் கொன்றது யார்?**

பிரான்சில் புலிகளின் பொறுப்பாளராக பொறுப்பேற்றிருந்த பரிதி (றேகன்) கொலை பற்றி நான் ஏற்கனவே கனடாவிலிருந்து வெளியாகும் பூபாளம் பத்திரிகையில் பங்கு



பிரிப்பும் படுகொலையும் என்றொரு விரிவான கட்டுரையை எழுதியிருந்தேன், அது இன்னமும் எனது வலைப் பக்கத்தில் உள்ளது. புலிகளின் அழிவிற்கு பின்னர் வெளிநாடுகளில் உள்ள அவர்களது பல மில்லியன் டொலர் பெறுமானமுள்ள சொத்துக்களை யார் எப்படி பிரிப்பது என்பதில் பெரிய போட்டிகளும், அந்தச் சொத்துக்களுக்காக சண்டைகளும் வெளிநாடுகளில் நடந்து கொண்டிருக்கிறது. அப்படியொரு போட்டியில் ஒரு குழுவினரால் கூலிக்கு அமர்த்தப் பட்டவர்களால் பரிதி சுட்டுக் கொல்லப் பட்டார்.

இவரது கொலை சம்பந்தமாக சந்தேகத்தின் பெயரில் இருவர் கைது செய்யப் பட்டிருந்தனர். ஆனால் பிரான்சில் இது போன்ற வந்தேறு குடிகளான வெளிநாட்டவர்களின் குழு மோதல்களையும் அதனால் நடக்கும் கொலைகளையும் பற்றி பிரெஞ்ச் காவல்துறையினர் அதிகளவு அக்கறை கொள்வதில்லை, கொன்றவனும் வெளிநாட்டவன் செத்தவனும் வெளிநாட்டவன் என்பதால் அவர்கள் அதைக் கணக்கெடுப்பதில்லை. அதே நேரம் தங்கள் நாட்டிற்கோ தங்கள் மக்களிற்கோ பாதுகாப்பு பிரச்சினை என்று வரும்போது பிரெஞ்ச் காவல்துறையினரின் நடவடிக்கைகள் இறுக்கமாக இருக்கும். எனவே பரிதி கொலையில் கைதானவர்களும் சத்தமின்றி விடுதலை செய்யப்பட்டு விட்டனர்.

**பரிதியை கொன்ற குழு எது?**

பரிதியால் வளர்க்கப்பட்ட வன்முறைக்குழுவான “பாம்பு குறூப்” எனப்படும் குழுவில் இயங்கியவர்களே பரிதியைக் கொன்றார்கள்.

**பரிதி வன்முறை குழுவை வளர்த்தாரா? விபரமாக அதைப்பற்றி கூற முடியுமா?**

பரிதி மட்டுமல்ல வெளிநாடுகளில் புலிகளின் அனைத்துலக செயலகத்திற்கு பொறுப்பாக இருந்தவர்கள் அனைவருமே காலங் காலமாக தங்களிற்கென ஒரு வன்முறை குழுவை தங்களிற்கு கீழே இயக்கியபடிதான் இருந்தார்கள். அதில் பெரும்பாலும் புலிகள் அமைப்பில் இருந்து விலகி வெளிநாடு வந்துசேர்ந்தவர்களும், நிரந்தர வதிவிட உரிமையற்ற, அல்லது வேலையற்ற பல இளைஞர்களும் இருந்தார்கள். புலிகளிற்கு பணம் கொடுக்க மறுப்பவர்கள், புலிகளிற்கு எதிராக கருத்து வைப்பவர்களை, எழுதுபவர்களை மிரட்டுவது, அடிப்பதுதான் இவர்களது வேலை. ஐரோப்பாவில் இப்படியான மிரட்டுதல், அடித்தல் போன்ற வன்முறை கலாச்சாரத்தை உச்சத்திற்கு கொண்டு சென்றவர்களில் சுவிஸ் பொறுப்பாளராக இருந்த முரளியும் பிரான்ஸில் சுக்குளா என்பவரும் மிக முக்கியமானவர்களாவார்கள்.

**“சுக்குளா” பற்றி விபரமாக சொல்ல முடியுமா?**

தற்சமயம் பிரான்சின் புறநகர் பகுதியில் வசிக்கும் இவர் புலிகள் அமைப்பில் வடமராட்சி பகுதியில் உள்ள நெல்லியடி மற்றும் கரவெட்டி பகுதிகளிற்கு பொறுப்பாளராக இருந்தவர். இந்திய இராணுவ காலத்தில் அன்ரன் பாலசிங்கமும் அவரது மனைவி அடேலும் இவரது பாதுகாப்பில்தான் இருந்தார்கள். இவர் இந்திய இராணுவத்திடம் பிடிபட்டதும் புலிகளின் ஏராளமான ஆயுதங்களை காட்டிக் கொடுத்தது மட்டுமல்லாமல், அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மறைவிடத்தையும் காட்டிக் கொடுத்துவிட்டிருந்தார். இவரது தகவலை வைத்து அன்ரன் பாலசிங்கமும் அவரது மனைவியும் இருந்த மறைவிடத்தை இந்திய இராணுவம் சுற்றி வளைத்திருந்தனர். ஆனால் பொது மக்களின் உதவியால் அன்று அவர்கள் தப்பி விட்டிருந்தார்கள். அதன் பின்னர் நெல்லியடி சந்தியில் இந்திய இராணுவத்தோடு சேர்ந்து தலையாட்டியாக இருந்து புலி ஆதரவாளர்கள் பலரையும் காட்டிக் கொடுத்திருந்தார். இதனால் ஆத்திரமடைந்த புலிகளின் தலைமை அவருக்கு மரண தண்டனை விதித்திருந்தது.

சுக்குளாவை கொல்வதற்காக அன்று அந்தப் பகுதிகளில் இயங்கிய புலிகள் பல தடைவை குறிவைத்தார்கள், ஆனால் சுக்குளா தப்பிவிட்டார். பின்னர் இவர் காங்கேசன்துறை முகாமிற்கு மாற்றப்பட்டிருந்தார். இந்திய இராணுவம் இவரை விடுதலை செய்தபோது தனக்கு புலிகளால் உயிருக்கு ஆபத்து எனவே தன்னை கொழும்பில் கொண்டு போய் விடும்படி கோரிக்கை வைத்ததையடுத்து இந்திய இராணுவம் இவரை தங்கள் விமானத்தில் கொண்டு வந்து கொழும்பில் இறக்கி விட்டிருந்தார்கள்.

அங்கிருந்து வெளிநாடு வந்து சேர்ந்தவர் புலிகளுக்கு பயந்து அடங்கி இருந்தார். பின்னர் யாழ். மாவட்ட தளபதியாக இருந்த கிட்டு ஐரோப்பா வந்திருந்த சமயம் இவரை தேடிக் கண்டு பிடித்து தலைமையிடம் கதைத்து இவருக்கு



மன்னிப்பும் வழங்கியதோடு மீண்டும் வெளிநாடுகளில் இயக்கத்திற்கு வேலை செய்யும் பொறுப்பையும் கொடுத்திருந்தார்.

**தலைமையால் மரண தண்டனை வழங்கப்பட்ட ஒருவருக்கு கிட்டு அவரை வலிந்து தேடிப்பிடித்து தலைமையிடம் மன்னிப்பு வாங்கிக் கொடுத்து அவரை மீண்டும் இயக்கத்திற்கு வேலை செய்யவைக்க வேண்டிய தேவை என்னவாக இருக்கும்?**

சுக்குளாவும் கிட்டுவும் நீண்ட காலமாக நெருங்கிய நண்பர்கள். அதே நேரம் அவர்களது ஆழமான நட்பிற்கு பின்னரான ஒரு கதையும் உண்டு. 1986ஆம் ஆண்டு ரெலோ இயக்கம் புலிகளால் அழிக்கப்பட்டதை கண்டித்து யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தார்கள். அதே நேரம் யாழ். பல்கலைக் கழகத்தில் புதிய மாணவர்களை பகிடிவதை செய்யக்கூடாது என்றொரு சட்டத்தை புலிகள் அறிவித்திருந்தார்கள். ஆனாலும் சில மாணவர்கள் புதிதாக இணைந்த மாணவிகளை பகிடி வதை செய்திருந்தார்கள். அதற்காக பல மாணவர்கள் கிட்டுவால் தண்டனை பெற்றிருந்தனர். அப்படி தண்டனை பெற்ற கிழக்கு மாகாணத்தை சேர்ந்த மாணவன் விஜிதரன் கடத்தப்பட்டு காணாமற் போயிருந்தார்.

இது யாழ்.குடா நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய சம்பவமாக இருந்தது. ஆரம்பத்தில் இந்தக் கடத்தலை ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கமே செய்ததாக புலிகளால் பரப்புரை செய்யப் பட்டது. ஆனாலும் புலிகளே கடத்தியதாக மாணவர்கள் நம்பினார்கள். அந்தக் கடத்தலை கிட்டுவின் உத்தரவின் பேரில் நடத்தியவர்களில் சுக்குளாவும், தெல்லிப்பளை பிரதேச பொறுப்பாளராக இருந்த மதி என்பவரும் முக்கியமானவர்கள். விஜிதரன் பின்னர் புலிகளால் கொல்லப்பட்டுவிட்டார்.

அந்த மாணவர் போராட்டங்களின் தொடர்ச்சியாகவே ரயாகரனும் புலிகளால் கடத்தப்பட்டிருந்தார். ஆனால் பல்கலைக் கழகத்தில் பல மாணவர்கள் போராட்டங்களை நடத்தியிருந்தாலும், விஜிதரன் கடத்தப்பட்டு கொல்லப் பட்டதற்கு ஒரே காரணம் அவர் பகிடிவதை செய்த பெண் கிட்டுவின் காதலியாக இருந்தார் என்பதேயாகும். அது எவருக்குமே தெரிந்திராத விடயம். இதற்கு கைமாறாகவே கிட்டு சுக்குளாவிற்கு மன்னிப்பு வாங்கிகொடுத்திருந்தார்.

(தொடரும்...)

# நந்திதா தாஸ்



முப்பதுக்கும் மேற்பட்ட படங்களில் நடித்தவர். இயக்குநர், நாடகக் கலைஞர், சமூக ஆர்வலர் போன்ற பெருமைகள் நந்திதா தாஸ்”க்கு உண்டு. பள்ளியில் படிக்கும்பேரதே ச.ஃப்தர் ஹாஸ்மியின் “ஜன நாட்டிய மன்ச்சில்” ஆறாண்டுகள் பயிற்சிபெற்றவர் நந்திதா. நாடகங்களில் நடித்து வந்தபோதே சமூக சேவையில் எம்.ஏ. பட்டம் பெற்றார். கல்லூரியில் படிக்கும் போதே பகுதி நேரமாக தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலமாக குடிசை வாழ் சிறுவர்கள் நலனுக்காக ஆசிரியர்கள், மாணவர்களுடன் சேர்ந்து கல்வி மற்றும் நாடகக்கலையை கற்றுக் கொடுத்துள்ளார்.

1987ஆம் ஆண்டில் இவரது முதற்படமான “பரினாட்டி” வெளியான பின்னர் திரைப் படங்களில் நடிப்பதைத் தவிர்த்து டிவி தொடர்களில் நடித்தார். பின்னர் “ஃபயர்” திரைப்படம் இவரது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியது. இதில்தான் அவருக்கு பிரதான பாத்திரம் கிடைத்ததோடு படமும் கடும் விமர்சனத்துக்கு உள்ளானது. சப்னா ஆஸ்மி, குல்பூஷண் கார்பந்தா போன்ற பிரபல நடிகர்களுடன் நடிக்கும் வாய்ப்பை நந்திதாதாஸே தேடிப் பிடித்தாராம். இயக்குநர் தீபா மேத்தா, தகுதியான நடிகையைத் தேடுகிறார் என்பதைக் கேள்விப்பட்ட நந்திதா நேரே அவரிடம் சென்று துணிச்சலாக பேசிய பின்னரே, “சீதா” பாத்திரத்திற்கு இவர்தான் பொருத்தமானவர் எனத் தீர்மானித்து தீபா இவருக்கு வாய்ப்பளித்தார். ஷப்னா ஆஷ்மிதான் காட்சிகளில் எப்படி நடிப்பதென்று சொல்லித் தந்தாராம்.

தமிழ், மலையாளம், ஆங்கிலம், வங்காளம், அஸ்ஸாமி என பல மொழி படங்களில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. என்னை ஒரு நடிகையாகவோ, நாடகக் கலைஞராகவோ நான் கருதியதில்லை. எனக்கு ஓய்வென்பதே கிடையாது. அதே சமயம் ஒரே கொள்கையில் பிடிவாதமாக நிற்பவளும் அல்ல. பலவித மான கருத்துக்களை ஏற்றுக் கொள்வது எனக்கு ஆர்வத்தை அளிக்கிறது.

தோல்வியைப் பற்றி நான் கவலைப்படுவதே இல்லை. புதிதாக ஒன்றைச் செய்யும்போது அது வெற்றியும் அடையலாம். தோல்வியும் அடையலாம். அதை ஏற்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

தற்போது ஸ்பானிஷ் திரைப் படமொன்றில் நடித்து வருகிறேன். என்னுடைய மகன் விஹானுடன் செலவிடும் நேரம்தான் எனக்கு மிகவும் மதிப்புள்ளதாகவும் அவனது கண்கள் வழியாக காணும் உலகம் அன்பால் பிணைக்கப்பட்டதாகவும் தெரிகிறது என்கிறார் நந்திதா தாஸ்.

# முஸ்லிம்கள் துரத்தியடிப்பு கண்டன தீர்மானம் வடமாகாண சபையில் வருமா?



– எழுகதிரோன் கட்டுரையிலிருந்து.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் அரச படைகளால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வடமாகாண-சபை உறுப்பினர் அனந்தி கூட தனது கணவரான புலிகளின் தளபதி எழிலன் காணாமல் போனமை தொடர்பில் இராணுவத்தினரை குற்றம் சாட்டி காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் வாக்குமூலம் அளித்துள்ளார்.

அதேவேளை அவர் அங்கம் வகிக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்போ மேலும் ஒருபடி சென்று இந்த காணாமல் போனமை மற்றும் படுகொலைகள் தொடர்பாக சர்வதேசத்தின் விசாரணையை கோருகிறது. முள்ளி வாய்க்கால் இறுதி யுத்தத்தின் போதா்ன அழிவுகள் குறித்து வடமாகாண சபை கண்டன தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளது.

இதேபோல் புலிகளின் மீதான விசாரணை-யையும் சர்வதேசத்திடம் ஒப்படைக்க தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்வருமானால், புகலிட நாடுகளில் வாழும் முன்னாள் புலி பொறுப்பாளர்கள் பலர் கைதாக நேர்வது மட்டுமன்றி தண்டனைக்கும் ஆளாக நேரிடும். ஆனால் இவர்களுக்கெல்லாம் விசாரணையில் இருந்தும் தண்டனைகளில் இருந்தும் விதிவிலக்கு அளிக்க கூட்டமைப்பு விரும்புகிறது. அதுமட்டுமன்றி சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றவர்களுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு மன்னிப்பளித்து தம்மோடு இணைத்துக்கொண்டுள்ளது.

ஆக எமது மக்களின் அழிவுகள் பற்றி நாம் கவலை கொண்டுள்ளோம் என்பதெல்லாம் ஒருதலைப்பட்சமாகவே இருக்கிறது.

கிழக்குமாகாணத்தில் இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேறு விதமாக காய்களை நகர்த்த முனைகின்றது. அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரிடமும் விசாரணைகளை நடத்த வேண்டும் என்று காத்தான்குடி நகரசபையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நேச சக்தியான நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் கூறுகின்றது.

முஸ்லிம்கள் மீதான எல்லாவிதமான படு கொலைகளும் இன சுத்திகரிப்புகளும் விசாரிக்கப்பட வேண்டும் என்பதில் முழு நியாயங்களும் உண்டு. ஆனால் இந்த கோரிக்கைகளின் பின்னால் உள்ளது முஸ்லிம் மக்கள் மீதான கரிசனை அல்ல. கடந்த சில வருடங்களுக்கு முன்னர் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் இந்த நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் கருணா பிள்ளையான் போன்றோர் மீது இந்த குற்றச்சாட்டுகளை முன் ஸ்வக்கவில்லை. ஏனெனில் அப்போது அவர்கள் கூட்டமைப்புடன் கரம் கோர்க்கவில்லை.

மேலும் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் கவனம் கொள்ள வேண்டிய சில விடயங்கள் உண்டு. இன்று மட்டக்களப்பில் தமிழ் முஸ்லிம் சமூகங்கள் எதிர்கொள்ளும் காணிப் பங்கீட்டு பிரச்சினைகளை எல்லோரும் சம அந்தஸ்தோடு இருந்து பேசி தீர்த்துக்கொண்டு வரும் வாய்ப்புகள் மகிழ்ச்சிக்குரியன. கிழக்கில் இடம்பெற்ற இனப்படுகொலைகளை பேசுவதென்பது நல்லிணக்கத்தை நோக்காக கொண்டிருக்க வேண்டுமேயன்றி மீள சீராகிவரும் இன உறவு-களில் பங்கம் ஏற்படுத்துவதாய் இருக்க கூடாது. ஆனால் உங்களது முயற்சிகள் மறுதலையாக முஸ்லீம் ஆயுத குழுக்களால் கொல்லப்பட்ட தமிழர்களை பற்றிய நினைவுகளை மட்டக்களப்பு அம்பாறை மக்களிடத்தில் ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது. இது மீண்டும் இன முரண்பாடுகளை கூர்மைப்படுத்திவிடக் கூடிய ஆபத்துகளையும் கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும்

இவை அனைத்தையும் தாண்டி மனித உரிமை மீறல்களில் சம்பந்தப்பட்டவர்கள் அல்லது உண்மை தெரிந்தவர்கள் தகவல்களை ஒப்புவிக்க வேண்டுமென்பது அவசியமானது. அதை விடுத்து நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் போன்ற ஒரு அரசியல் அமைப்பு தேசத்தையே நாசம் செய்த சிந்தனையில் செயல்படும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கைப்பொம்மையாக செயற்படக் கூடாது.

உண்மையிலேயே நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் முஸ்லிம்களின் நலன் சார்ந்துதான் மேற்படி பிரேரணையை முன்வைத்தது என்பது சத்தியமானால் 2006ல் சமாதான காலத்தில் நடந்த முஸ்லிம்களின் மூதூர் வெளியேற்றம் பற்றியும் அதன் சூத்திரதாரியான எழிலனின் முடிவுகள் பற்றியும் அவரது மனைவி அனந்தியிடம் விசாரணை கோருமாறு அடுத்த நகரசபை கூட்டத்தில் பிரேரணை கொண்டுவர வேண்டும்.

அதுமட்டுமல்ல இனசுத்திகரிப்பாக 1990ல் இடம்பெற்ற யாழ்-முஸ்லிம்கள் துரத்தியடிப்பு பற்றிய கண்டனத் தீர்மானத்தை வடமாகாண சபையில் கொண்டுவர கூட்டமைப்பினர் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்துக்கு வழங்கிய போனஸ் உறுப்பினர் அயூப் அஸ்மி அவர்கள் ஊடாக முயலவேண்டும்.




## அழைப்பொலியா அபாயவொலியா?

– கருணாகரன் –

இருளும் பனியும் குழைந்த தெருக்களில்
சைக்கிளை மிதித்துச் செல்கிறாள் மேகலை.

அதிகாலைத்தூக்கக் கலக்கத்தில் துவள்கின்றன கண்கள்

இரவு நெடுநேரம் தூங்கா விழிகளில்
படிந்திருக்க வேண்டிய தூக்கத்திற்குப் பதிலாக
நேற்றுச் சிதைந்த கைகளின் குருதிப் படிவு.

நினைவுகள் மோதி
அவளுடல் தளர்கிறது.

நேற்றும் களைப்போடு மூன்றாவது சதுரத்தில்
அபாயத்தை நீக்க முயல்கையில்
ஒரு விசப் பூண்டாகத் தீண்டியது அது.

ஒரு கணம்தான்.
அபாயம் விளைந்து கைகளைச் சிதைக்கத்
தெறித்தது குருதி.
சரிந்து
துயர்க்கொடியெனப் படர்ந்தாள் அருகிருந்த தோழி.

இந்த வாரத்தின்
ஆறாவது குருதித்தெறிப்பு அது.
அபாயங்கள் நீங்குகின்றனவா
அல்லது தன்னருகில் அவை விளைகிறதா என்றேதும்
புரியவில்லை அவளுக்கு.

முறைகள் பல தெரிந்தாலும்
பயிற்சிகள் பல தேர்ந்தாலும்
வெடிநிலைக் கண்ணிகளை
அகழ்ந்தகற்றுவதொன்றும் இலகில்லை
அதில் அபாயங்கள் குறைந்து விடுவதுமில்லை.

பாம்புறங்கும் புற்றினுள் கணமும் கைவிட்டு
வாழும் விதி அதுவல்லவா?

வழியில் உறைந்திருக்கும் இருளையும்
மூட்டப் பனியையும்
விடக் கடிந்து விழியில் திரைந்தது கண்ணீர்,
நேற்றுத் தெறித்த தோழியின்
கைக் குருதியிலிருந்து பீறிட்டு.


தளரும் தன்னுடலை வலுவாக்கி மேலும்
உன்னி மிதிக்கிறாள் சைக்கிளை இக்கணம்.

இருளை ஊடுருவி ஒலிக்கிறது
கண்ணிவெடி அபாயக் காட்டுக்கு அழைத்துப்போகும்
வெடிப்பொர்ருளகற்றும் நிறுவன அழைப்பொலி.
ஒரு கணம் அது அழைப்பொலியா அபாயவொலியா எனக்
கேட்டு நின்றது அவளிதயம்.

தயங்கிச் சரியும் உடலைத் தாங்க வலுவற்ற இதயத்தை
விரட்டுகின்றன அவள் குழந்தைகளின் கண்கள்.
பசித்த கண்களை விடவும்
அபாயமொன்றில்லை எனப்போகிறாள் மேகலை
அவ்விருளில்.

கேட்பது அழைப்பொலியா
அபாயவொலியா?

## பழைய காரும் எம்ஜியாரும்



பொங்கல் பரிசாக ஒரு புதுக் கார் வாங்க வேண்டும் என்று, என்னிடம் என் மனைவி சில நாட்களாக சொல்லிக் கொண்டிருக்கிறாள். இப்போது, நான் வைத்துக் கொண்டிருக்கும் கார் பழையது; அதை வாங்கி, பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டது என்பது அவளது கண்டுபிடிப்பு!

பொதுவாக சினிமா கலைஞர்கள் நினைத்தால், புதுக் கார் வாங்கி விடுகின்றனர். ஆனால், என்னைப் பொறுத்த வரையில், அது ஏனோ இதுவரை கைகூடவில்லை.

மனைவியின் முணுமுணுப்பிலும் நியாயம் இருக்கிறது. சென்ற ஆண்டு, பொங்கல் அன்று, புதுக் கார் வாங்கி விட வேண்டும் என்ற அவளது கருத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தேன். அதற்கேற்ப, இருவரிடம் காரின் விலை விவரங்களை கேட்டு வந்தேன். அது கண்டு என் மனைவியின் முகத்தில் மலர்ச்சி.

ஆனால், சென்ற ஆண்டு வரையில், புதுக் கார் வாங்கும் பேச்சு பேச்சாகவே போய் விட்டது. நான் என்ன செய்வது! சில காரின் விலையை கேட்கும் போது, அசந்து போகிறேன். காரின் விலை கேட்டு, மலைக்கும் போதெல்லாம், என்னை சுற்றியிருக்கும் படவுலகப் பிரமுகர்களும், கார் தரகர்களும், "நீங்களா இப்படி கேட்கிறீர்கள்... புதுக் கார் வாங்க எம்.ஜி.ஆர்., தயங்குவதா..." என்று கேட்கின்றனர். நான் என்ன விலை கொடுத்தும், புது மொடல் கார் வாங்க முடியும் என்று அவர்கள் நினைக்கின்றனர்.

இப்படிக் கேட்டு கேட்டு, அடுத்த பொங்கலும் வந்து விட்டது. ஆனால், நான், இன்னும் புது கார் வாங்காததற்கு இன்னொரு காரணமும் உண்டு. அது, பழைய காரிடம், பழகிய பாசம் தான். அந்தப் பாச உணர்ச்சி, என்னை புதுக் கார் வாங்க வேண்டும் என்ற எண்ணத்தை, மாற்றிக் கொண்டே வருகிறது.

என்னிடம், இப்போதுள்ள பெரிய கார் மிகவும் விசுவாசமுள்ளது; தென்னகம் முழுவதும், என்னைச் சுமந்து சென்றிருக்கிறது; பல வெற்றிப் படங்களில் நடிக்க, அது ஸ்டுடியோக்களுக்கு என்னை விரைவாக ஏற்றிச் சென்றிருக்கிறது. பல ஆயிரக்கணக்கான இரசிகப் பெருமக்களால் சூழ்ந்து கொள்ளப்பட்டு, தனக்கும் பெரிய செல்வாக்கை பெருக்கிக் கொண்டிருக்கிறது.

தொலைவில் வரும் போதே, அதை பலர் அடையாளம் கண்டு, என் பெயரைக் கூறி ஆரவாரம் செய்து வருகின்றனர். அந்த பெருமையை, கடந்த பத்து ஆண்டுகளாக அது அனுபவித்து வருகிறதே, அதை நான் தகர்க்கலாமோ! என் மனம் ஏனோ இடம் கொடுக்கவில்லை.

பழசாகி விட்டதாலேயே, சில நல்ல மனிதர்களை உதறி விட முடிகிறதா! என் காரும் அப்படித் தான் என்று எனக்குத் தோன்றுகிறது.

என் சமாதானங்களையும், நான் கண்டுபிடித்திருக்கும் காரணங்களையும், என் மனைவி ஏற்றுக் கொள்வாளா என்று எனக்கு தெரியவில்லை. ஆனால், என் பழைய கார், இன்னும் என்னிடம் இருந்து கொண்டு தான் இருக்கிறது.

(1970 "சுதேசமித்திரன்" பொங்கல் மலரில் எம்.ஜி.ஆர்., எழுதிய கட்டுரையில்)

# பாடசாலை செல்லாத 12 மாணவர்கள் சண்டிலிப்பாய் பகுதியில் கண்டுபிடிப்பு

## சிறுவர் மேம்பாட்டு பிரிவின் திடீர் நடவடிக்கை

வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பாடசாலைக்குச் செல்லாத 12 மாணவர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். பிரதேச செயலர்கள் ஆலோசனைக் கேற்ப பிரதேச செயலக சிறுவர் மேமபாட்டு உத்தியோகத்தர் மா.பத்மறாஜ் தலைமையில் சென்ற குழுவினரே மேற்படி மாணவர்களை இனங்கண்டுள்ளனர்.

இவர்களில் சகலரும் 12-16 வயதிற்கும் இடைப்பட்டவர்கள். இவர்களில் பாடசாலை செல்லாது இருவர் வாகனத் திருத்தகத்தில் வேலை செய்துகொண்டிருந்த நிலையிலும், ஏனையவர்களில் இருவர் கடற்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நிலையிலும், மற்றும் இருவர் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த நிலையிலும் ஏனையவர்கள் வீதியில் அலைந்து திரிந்த நிலையிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஆனைக் கோட்டை பகுதியிலுள்ள பாடசாலைகளினைச் சேர்ந்த மாணவர்களாவார்கள்.

இவர்களில் சிலர் ஆசிரியர் வழங்கிய வீட்டுவேலைகளை செய்யாமை காரணமாக ஆசிரியரினால் தண்டிக்கப்பட்டமையாலும், சிலர் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிக்கு பணம் செலுத்த முடியாமையாலும் பாடசாலைக்குச் செல்லவில்லையெனத் தெரிவித்த துடன் இவர்களுக்கான அனைத்து பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு அவ் அவ் பாடசாலைகளில் மீள இணைக்கப்பட்டுள்ளனர்.

மீள் இணைக்கப்பட்ட மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இத் திடீர் பரிசோதனையில் கிராமசேவகர் நிஷாந்தன், பொருளாதார அபிவிருத்தி உததியோகத்தர்கள், மானிப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார், குறித்த பகுதியிலுள்ள பாடசாலைகளின் ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அண்மைக்காலமாக வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக குழுவினரால் மேற்கொள்ளப்படும் 2 ஆவது திடீர்ப் பரிசோதனை இது வாகும். (48)

## சிறைத்தண்டனை

முல்லைத்தீவுப் பகுதியில் கசிப்பை வைத்திருந்ததாக குற்றஞ் சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 6 மாத கடூழியச சிறைத் தண்டனையும் விதித்து நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். மேற்படி நபர் 3 தடவைக்கு மேலாக கசிப்பு பாவனையில் ஈடுபட்டு இருந்ததுடன் தண்டப்பணம் விதிக்கப் பட்டு சமுதாய சீர்திருத்தத் திற்கு உடபட்டு இருந்தபோதிலும் திருந்தவில்லை என்ற காரணத் தினால் மேற்படி தண்டனை வழங்கப்பட்டது. (170)

## கொடிமுந்திரிகைச் செய்கையை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கொடி முந்திரிகைச்செய்கைக்கு இவ்வாண்டு பத்து விவசாயிகள தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு முந்திரிகைக் கன்றுகளும் ஏனைய பொருட்களும் வழங்கப் பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட விவசாய (விரிவாக்க) பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள கொடி முந்திரிகைச் செய்கை பற்றி விவசாயப்பணிப்பாளர் அவர்களிடம் கேட்டபோது கடந்த ஆண்டு fao நிறுவனத்தினரால் 23 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு முந்திரிகை கன்றுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் முந்திரிகைச் செய்கைக்கான சிமெந்துத் தூண்கள் கம்பிவலைகள் உள்ளிட்ட பொருட்கள் மானியமாக வழங்கப்பட்டு இச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதில் சில குறிப்பிட்ட செய்கைகள் அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் 2014 ஆம் ஆண்டு மத்திய விவசாய அமைச்சின் கீழ் பத்து பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு முந்திரிகைக் கன்றுகள் இலவசமாகவும் ஏனைய தூண், கம்பி ஆகியன 50 வீத மானிய அடிப்படையில் வ்ழங்கப்பட்டு வருகின்றன.என தெரிவித்துள்ளார். (கே)

## இளைஞர் கழகத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவாகியுள்ளனர்.

2013 ஆம் ஆண்டுக்கான நிர்வாகசபை கலைக்கப்பட்டதை தொடர்ந்து 2014 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகளை தெரிவதற்கான கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் தலைவராக ச.செந்தில் குமரனும், பொருளாளராக அ.ஜெபநேசனும், அமைப்பாளராக டொன் சில்வெஸ்ரனும், உபதலைவராக றொபின்சனும், உப செயலாளராக தர்சிகாவும், உப அமைப் பாளராசக கீர்த்தனாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

துறை ரீதியாக விளையாட்டுத் துறைக்கு ஜீன்கார்த்திகாவும், கல்வி மற்றும் தொழில் வழி காட்டல் துறைக்கு நிலகஷனும், கலாசாரத்துறைக்கு குகதரஷனும், சூழல் பாதுகாப்புத் துறைக்கு சுலகஷனாவும் ஊடகத்துறைக்கு டி.சூரெயும் தெரிவாகினர். (48)



காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தினரால் நீர் திட்டம் தொடர்பான ஆரம்ப நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் இவ்வாலயத்தில் தொட்டிகளில் பொதுமக்கள் நீர் எடுப்பதற்கென பைப் மற்றும் குழாய் புதிதாக பொருத்தப்பட்டது. இதனை விருந்தினராகக் கலந்து கொண்ட விவசாய அமைச்சர் திறந்து வைப்பதைக் காணலாம். (50)

## கைகளின் அசைவுகளில் வெளிப்படும் உண்மைகள்

### பலவீனன்

ஆணியில் மாட்டப்பட்டிருக்கும் ஒரு சட்டையின் கைகளைப் போல ஒருவருடைய கைகள் உயிர் அற்ற மாதிரி தொங்கிக் கொண்டிருந்தால் இத்தகைய தொங்கும் கைகளை உடையவர் மிகமிப் பலவீனமான உள்ளம் படைத்தவராக இருப்பார்.

இவரால் ஒரு சிறு மகிழ்ச்சியையும் தாங்கிக் கொள்ள முடியாது நோய்வாய்ப்பட்டால் அதைப் பொறுக்க முடியாது திடீர் திடீரெனக் கோபம் பொத்துக்கொண்டு வரும். அந்த கோபாவேஷ உணர்ச்சிப் பிரவாகத்தில் கூறத்தகாத, பிறர் சகித்துக்கொள்ளமுடியாத சொற்களைக் கக்கிவிடுவார். பிற்பாடு அப்படி ஏன் நடந்து கொண்டேன் என்ன காரணத்திற்காக சொற்களைக் கூறினேன் என எண்ணி சிறு பிள்ளைபோல மூலையில் உட்கார்ந்து வருந்துவது மட்டுமன்றி சில சமயம் அழுதும் விடுவார். இவரிடம் சிந்திக்கும் ஆற்றல் ஒரு சிறிதும் கிடையாது. எதையும் சுயமாகச் சிந்தித்து தீர்க்கமான முடிவு எடுக்கும் செயற்பாடு அறவே இல்லையெனலாம்.

ஆகையால் எந்த ஒரு சிறிய காரியத்திற்கும் பிறரிடம் சென்று தான் ஆலோசனை கேட்க விளைவார். பிறர் கூறிய யோசனைகளைத் தன்னுடைய மூளையில் தோன்றிய கருத்துக்கள் தான் இவை என எல்லோரிடமும் தம்பட்டம் அடித்து தற்பெருமை பேசித்திரிய முற்படுவார்.

தன்னை எல்லோரும் ஒரு புத்திசாலியென்று புகழவேண்டும் என்பதில் அளவு கடந்த ஆசை. வெள்ளம் கொண்டிருப்பார். அப்படித் தன்னைப் புகழ்பவருக்கு வற்றல்போல அள்ளி அள்ளிக் கொடுப்பார். தன்னுடைய போதைமையை இயலாத் தன்மையை எவராவது சுட்டிக்காட்டி விட்டால் அவர்களை விஷம்போல வெறுப்பார். அத்தகையோரைத் தொலைவில் கண்டுவிட்டால் தலைதெறிக்க ஓடி ஒளிந்து கொள்வார். இவர் எல்லோருக்கும் ஓர் எடுப்பார் கைப்பிள்ளையாகவே விளங்கத் தலைப்படுவர். எந்தெந்தச் சமயத்தில் யார் யார் என்னென்ன சொல்கிறார்களோ அவற்றையெல்லாம் அப்படியே கேட்டு நடப்பார். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை இவரிடம் அமைந்திருக்கும்.

ஜோதிர் வித்யா ரத்னா
V.A.சிவராசா,
[B.A.B.Phil.Dip - in -Ed]

## முரசின் இன்றைய பலன்



(12.02.2014 புதன்கிழமை)

விஜய வருஷம் தை மாதம் 30 ஆம் திகதி.
புனர்பூச நட்சத்திரம் பி.ப. 8.59 வரை. பின் பூசம்
திரயோதசி / சித்தம்.
இராகு காலம் 12.34 - 02.04 வரை. சுபநேரம் 05.04 - 06.34 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பாதுகாப்பு நடவடிக்கையால் திருட்டு முயற்சி தோல்வி, எதிர்பாராத செயலால் நன்மை கிடைத்தல். |
| ரிஷபம் | கடன் நிலுவையைப் பெற கடும் முயற்சி எடுத்தல், புதியமனை அமைக்கும் வகையில் இடத்தை தெரிவு செய்தல். |
| மிதுனம் | விமர்சனங்களை எண்ணி நேரத்தை வீணழித் தல், திட்டப்பணி உரிய நேரத்தில் நிறைவேறல். |
| கடகம் | காலாவதியான உணவுப் பொருளினால் உடல் நலத்திற்குப் பாதிப்பு, பிறருடைய திறமையை பாராட்டல். |
| சிம்மம் | பாதுகாப்பு அசிரத்தையினால் வாகனம் திருட்டுப் போதல், அனுபவக் குறைவான செயலில் காலடி வைத்து அல்லல்படல். |
| கன்னி | கசப்பான சம்பவத்தை மறக்க எண்ணுதல், அனுபவ அறிவைப் பெற்றதால் கடமையை சரியாகச் செய்தல். |
| துலாம் | குறிக்கோளை தெளிவுபடுத்திய பின் அதை அடைய முயற்சித்தல், உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| விருச்சிகம் | தோல்வியைக் கண்டு துவண்டு போகாமல் தைரியத்துடன் செயல்புரிதல், ஏழரைச்சனியால் தெய்வத்தை வழிபடல். |
| தனுசு | ஊழியர்களின் ஒற்றுமையால் பணி இலகுவில் முடிவடைதல், தாயின் தேக நலம் மேன்மையடைதல். |
| மகரம் | எதிரியின் அடாவடித்தனத்தைக் கண்டு எதிர்த் தல், கைவிட்டிருந்த பயணம் பற்றிய எண்ணம் மீண்டும் துளிர் விடுதல். |
| கும்பம் | எதிர்மறையாகச் சிந்தித்ததால் வெற்றி இலக்கு தவறிப் போதல், பணி சிறக்க சக ஊழியர்களைத் தட்டிக் கொடுத்தல். |
| மீனம் | பொருளின் மீது நம்பகத்தன்மை ஏற்பட்டதால் வாங்க முயற்சித்தல், பிறருடன் ஒப்பிட்டுப் பார்த்து உங்களைத் தாழ்த்திக் கொள்ளாதீர்கள். |

# மூங்கிலாறு பிரதேச வைத்தியசாலை 22 மில்லியன் ரூபாவில் நிர்மாணிக்கப்படுகிறது

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மூங்கிலாறு வைத்தியசாலையின் கட்டுமானப்பணிகள் சுமார் 22மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படுவதாக முல்லைத் தீவு பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அ.திலீபன் தெரிவித்துள்ளார.

முல்லைத்தீவு மூங்கிலாறுப் பிரதேசத்தில் புதிய வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்குரிய பத்து ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு இப்பகுதி பொது அமைப்புக்களாலும் பொதுமக்களாலும் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் குறித்த வைத்தியசாலை அமைக்கப்படவுள்ளமை தொடர்பாக முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் அ.திலீபனை தொடர்பு கொண்டு கேட்டபோது, மூங்கிலாறுப் பகுதியில் வைத்தியசாலை அமைப்பதற்குரிய காணிகள் வழங்கப்பட்டு இப்பகுதி பொது அமைப்புக்களாலும் பொது மக்களாலும் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் இவ்வைத்தியசாலை அமைப்பதற்கு மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் 22 மில்லியன் ரூபா கிடைத்திருப்பதாகவும் அதற்கான ஆரம்பகட்டவேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஆரம்ப சுகாதார கட்டடம் ஒன்றில் குறித்த வைத்தியசாலை தற்போது இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கே)

# தமிழ்மொழித் தினப் போட்டி சுற்றுநிருபம் அனுப்பிவைப்பு

அகில இலங்கை ரீதியாக வருடாவருடம் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்டு வரும் தமிழமொழித் தினப் போட்டிகளை இவ் வருடம் நடாத்துவதற்கான விதிமுறைகள் அடங் கியசுற்று நிருபம் கல்வியமைச்சினால் கல்வி வலயங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சுற்று நிருபத்திற்கமைவாக நாட்டிலுள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலை மாணவர்களிடையே தமிழ்மொழித்தினப் போட்டிகளை நடாத்தவேண்டும் எனவும் அதற்கான அறிக்கையினை கல்வியமைச்சுக்கு உரியவாறு உரியகாலத்தில் அனுப்ப வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வழமைபோல் இப்போட்டிகள் பாடசாலை, கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் தேசிய மட்டங்களில் நடைபெறவுள்ளன. பாடசாலைமட்டப் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னரும் ஏனைய மட்டப் போட்டிகள் அந்தந்தக் கல்வி அதிகாரிகளின் தீர்மானத்திற்கு ஏற்பவும் நடாத்தப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழித்திறன் விருத்தியை மாணவர்களிடையே ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு நடாத்தப்படும் இப் போட்டிகள் ஆக்கம், கட்டுரை, இலக்கியநயம், சித்திரம், திறனாய்வு, இலக்கணம், குளு நாடக ஆக்கம், கவிதை, வாசிப்பு, பாவோதல், பேச்சு, வாசிப்பு, இசையும் அசைவும், நடனம். மேடை நாடகம், நாட்டிய நாடகம், வில்லுப் பாட்டு, விவாதம், சிங்கள வாசிப்பு, உறுப்பெழுத்து முதலான மொழிவிருத்திக் கூறுகளில் நடைபெறவுள்ளன.

கல்வியமைச்சின் அறிவுறுத்தலுகேற்ப சகல பாடசாலைகளும் போட்டிகளை நடாத்திய பின் பாடசாலை மட்டத்தில் தமிழ் மொழித் தின விழாவினைக் கொண்டாடி, வெற்றியீட்டிய மாணவர்களிற்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட வேண்டும் எனவும் சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (06)

## முருகானந்தாக் கல்லூரியின் கட்டடப் பணிகள் பூர்த்தியாகும் நிலை

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரியின் மூன்று மாடிக்கட்டடத்தின் கட்டுமானப்பணிகளில 95 வீதமான வேலைகள் பூர்த்தியாகியுள்ளன.

கிளிநொச்சி கல்வி வலயத்தின் முதல் நிலைக்கல்லூரிகளின் ஒன்றாகக் காணப்படுகின்ற முருகானந்தாக்கல்லூரி கடந்த 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் பல்வேறு வள நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

இசுறு பாடசாலை திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட இக்கல்லூரி 37 மில்லியன் ரூபாய் செலவில் மூன்று மாடிக்கட்டடம் அமைக்கும் பணி கடந்த ஆண்டின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் துரித கதியிலேயே ஆரம்பிக்கப்பட்டு வந்தன.


குறித்த கட்டடத்தில் கட்டுமானப் பணிகளில் 95 வீதமான வேலைகள் நிறைவடைந்துள்ளன. (கே)

## விண்ணப்பங் கோரல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சினால் ஒப்பனை மற்றும் சிகையலங்காரத் தொழிற்துறைகளில் தேசிய தொழிற்திறன் தகைமைகளை (NVQ) விருதளிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2013 இல் நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடையாதவர்கள் பங்குபற்றலாம் பரீட்சைக் கட்டணம் 250 ரூபாவாகும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி எதிர்வரும் 21 ஆம் திகதியாகும்.

இதுதொடர்பான மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்வதற்கு இல 011255046 தொலைபேசியூடாக பிரதி ஆணைக் குழுவின் பணிப்பாளருடன் (NVQ) தொடர்பு கொள்ளலாம் அல்லது 354/2 எல்விட்டிகல மாவத்தை நாரஹேன்பிட்டி கொழும்பு-05 என்ற முகவரியூடாக பெற்றுக் கொள்ளலாம். www.tvec.gov.lk இணையம் மூலமும் விபரங்களை அறிந்து கொள்ளலாம். (105)



முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச மத்தியஸ்த சபை அங்குரார்ப்பணமும் தெரிவான உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது தெரிவான உறுப்பினர்களுடன் பிரதிநிதிகள் அமர்ந்திருப்பதைக் காணலாம். (170)

# ஆயுர்வேதம்

## குடல் வீக்கம், தடிப்பு, வலி



பொதுவாகவே குடல் பகுதியின் சிறப்பான செயலாற்றலை மேம்படுத்தக்கூடிய உணவின் வகைகளில் கறிவேப்பிலை சிறந்தது. குடலில் ஏற்படும் வீக்கம், தடிப்பு, வலி போன்றவற்றைக் கறிவேப்பிலைத் துவையல் நீக்கிவிடும் திறன் கொண்டது. குளிர்ச்சியான வீரயமுடையதால் வயிற்றில் ஏற்படும் எரிச்சல் உபாதையைப் போக்கும். குடலில் தேவையற்ற கிருமிகளை வெளியேற்றும். மூலத்திற்கு நல்ல ஓர் உணவுப்பொருள். குடலில் ஏற்படும் விஷப் பாதிப்புகளை அகற்றும் என்று நிகண்டு ரத்னாகரம் எனும் நூல் கூறுகிறது.

காலை உணவாக, வெதுவெதுப்பான புழுங்கலரிசிச் சோற்றில் கறிவேப்பிலைத் துவையல் நல்லெண்ணெய்யுடன் விட்டுப் பிசைந்து, சின்ன வெங்காயம், தக்காளி, கொத்த மல்லி இலை அரிந்து, கடுகு தாளித்த தயிர் பச்சடியில் சேர்த்து தோய்த்துச் சாப்பிடுவது குடல் உபாதைகளுக்கு நல்லது. கறிவேப்பிலையை முக்கிய உள்மருந்தாகக் கொண்டு தயாரிக்கப்படும் "காளசாகாதி" கஷாயமும் நல்ல மருந்தாகும்.

பாவலிலை, பாவற்காய், வேப்பிலை, வேப்பம்பூ, வெந்தயக்கீரை, நாவல் இலை, கோவைக்காய் முதலிய கசப்பும் துவர்ப்பும் மிக்க இலைகளையும் காய்களையும் தொடர்ந்து உபயோகித்து வந்தால், கல்லீரல் வீக்கம், ஜவ்வு தடிப்பு, சிறுகுடல் ஒட்டியிருத்தல் போன்ற உபாதைகள் குறைந்து விடும். இலைகளைத் துவையலாகவும் கசக்கிப் பிழிந்தெடுத்த சாறாகவும் பயன்படுத்தலாம். காய்களை வதக்கிச் சாப்பிடலாம். வாழைத்தண்டு பொரியல் அடிக்கடி சாப்பிட, சிறுநீரகக் கல் விரைவில் உருகி, வெளியே வந்து விடும்.

வெறும் தண்ணீரைக் குடிப்பதைவிட சீரகம் ஓமம் போட்டுக் காய்ச்சிய தண்ணீர குடிப்பது நல்லது. சீரகம் 10 கிராம், ஓமம் 5 கிராம், 1 லீற்றர் தண்ணீரில் கொதிக்க விட்டு, அரை லீற்றர் ஆனதும் இறக்கி, வெதுவெதுப்பான நிலையில் ஒரு நாளில் பலமுறை கொஞ்சம் கொஞ்சமாக அருந்திவர, குடல் இழந்துள்ள சக்தியை மீட்டுத் தரும் குடிநீராக இது பயன்படும்.

ஜீரக வில்வாதி லேகியம், அஷ்ட சூரணம், தச மூலாரிஷ்டம் போன்ற மருந்துகளால் குடல்வயிற்றுப் பகுதிகளில் கிருமிகளின் சேர்க்கை அதிகம் ஏற்படாதவாறு பாதுகாக்கும். உபாதை உள்வர்களுக்கு, குடலில் உணவு சீரான வேகத்துடன் நகரும் தறுவாயில் குமுறலுடன், படபடப்புடன், சத்தத்துடன் நகர வாய்ப்பிருக்கிறது. அதனால் உணவுச் சத்து முழு அளவு ஏற்கப்படாமல் போக வாய்ப்பிருக்கிறது. அவற்றை இம் மருந்துகள் தவிர்க்கக் கூடியவை.

### கறிவேப்பிலை மகிமை...

1. ஒரு கைப்பிடி கறிவேப்பிலையை இரண்டு டம்ளர் தண்ணீர்விட்டு அரை டம்ளராக ஆகும்வரை நன்றாக கொதிக்க வைத்து குடித்துவர மலச்சிக்கல் இல்லாமல் போகும்.

2. வேப்பிலை போன்று கறிவேப்பிலையையும் மஞ்சள் சேர்த்து அரைத்து பூசிவர முகப்பரு, தேமல் மற்ற தோல் நோய்களும் சரியாகும்.

3. தினமும் இரண்டு கொத்து கறிவேப்பிலையைக் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர பித்தம் அதிகரிப்பால் வரக்கூடிய இளநரை மாறும். இதைத் தொடர்ந்து பத்து நாள் சாப்பிட வேண்டும். நீரிழிவு நோயாளிகள் இதேபோல் சாப்பிட்டு வந்தால் நோய் கட்டுக்குள் வரும்.

4. சுக்கு, மிளகு, சீரகம், கறிவேப்பிலை எல்லாம் சம அளவு எடுத்து பொன் வறுவலாக வறுத்துத் தூளாக்குங்கள். ஓர் உருண்டை சோற்றில் அரை ஸ்பூன் அளவுக்கு இந்தத் தூளைப் போட்டு நெய்விட்டுச் சாப்பிட்டுவர ஜீரண உறுப்புகள் எல்லாம் வலுவாகும்.

5. கறிவேப்பிலையைத் துவையல் செய்து சாப்பிட்டு வந்தால் வாந்தி, பேதி, செரிமானக் கோளாறு, வயிறு சம்பந்தமான நோய்கள் சரியாகும்.

# வீதி விதிமுறைகளை மீறியோருக்கு தண்டம்



கிளிநொச்சிப் பகுதியில் வீதி ஒழுங்கு விதிமுறைகளை மீறியும் உரிய ஆவணங்கள் இன்றியும் பயணம் செய்த பலர் வீதிப்போக்குவரத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, பளை, பூநகரி ஆகிய பகுதிகளில் கடந்த மாத இறுதி நாட்களில் மேற்படி வீதி ஒழுங்கு விதிகளை மீறியும் உரிய ஆவணங்கள் இன்றியும் வாகனங்கள் செலுத்தியவர்களுக்கு எதிராக கிளிநொச்சி, பளை, பூநகரி பொலிஸார் வழக்குகளை பதிவு செய்து கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் குறித்த சந்தேக நபர்களை ஆயர்படுத்தியிருந்தனர். அதன் அடிப்படையில் கவனயீனமாக மோட்டார் சைக்கிள் செலுத்திய ஒருவருக்கு 1500 ரூபாவும் காப்புறுதி பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய ஒருவருக்கு 5000 ரூபாவும் வரியட்டையின்றி மோடடார் சைக்கிள் செலுத்திய ஒருவக்கு 1500 ரூபாவும் புகையிரக் கடவை மூடியிருக்கும் போது கவனயீனமாக புகையிரத கடவைவை கடந்தவருக்கு 1500 ரூபாவும் கவனயீனமாக வாகனம் செலுத்தியவருக்கு 1500 ரூபாவும் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக் கிள் செலுத்தி ஒருவருக்கு 3000 ரூபா என தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. (கே)

# தலைமைத்துவ பயிற்சி மாணவர்களுக்கு பேருந்து சேவை


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து மின்னேரியாவுக்கு தலைமைத்துவப் பயிற்சிக்கு செல்லும் மாணவர்களுக்கான விசேட பேருந்து சேவை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் இருந்து தலைமைத்துவப் பயிற்சிக்காக மின்னேரியாவுக்குச் செல்லவிருக்கும் மாணவர்களினதும் மற்றும் கல்விசார் அமைப்புக்களினதும் வேண்டுகோளிற்கிணங்க 15 ஆம் திகதி காலை 6 மணிக்கு யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து விசேட பேருந்து சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இப் பேருந்து சேவைக்கான முன்பதிவுகளை யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளலாம் என யாழ்ப்பாண இ.போ.ச முகாமையாளர் செ.குலபாலச்செல்வம் அறிவித்துள்ளார்.

# அபிவிருத்தியுடன் கூடியதான மேம்பாட்டுக்கு பங்காற்றுவோம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அபிவிருத்தியுடன் கூடியதான மேம்பாட்டுக்காக தொடர்ந்தும் நாம் பங்காற்றுவோம் என உரும்பிராயில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 43 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.

உரும்பிராய்க்கு கடந்த 9 ஆம் திகதி விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டார்.

சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 43 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பல்வேறு கலாசார போட்டிகள் ஏற்கனவே நடாத்தப்பட்டிருந்த நிலையில் அவற்றில் சாதித்தோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இதன்போது கருத்துரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

இப்பகுதியின் அபிவிருத்திக்காகவும் மக்களின் வாழ்வாதார மேமபாட்டிற்காகவும் தொடர்ந்தும் முழுமையான பங்களிப்பு வழங்கப்படும். அத்துடன் சமூக நல்லுறவை கட்டியெழுப்பும் வகையில சனசமூக நிலையம் ஆற்றிவரும் பங்கு பணிகள் பாராட்டத்தக்கவையாக அமைநதுள்ளன.

எதிர்காலங்களில் எமது சமூகம் அபிவிருத்தியுடன் கூடியதான வாழ்வாதார மேம்பாட்டிலும் முன்னேற்றம் காண வேண்டும் என்றார். இந்நிகழ்வில் அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன், ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளர் ஐங்கரன் ஆகியோரும் உடனிருந்தனர்.

# வீதிகள் புனரமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் கற்குவாரி வீதி, தச்சடம்பன் பெரிய புளியங்குளம் வீதி ஆகிய வீதிகள் 2011ஆம் ஆண்டு நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட மாங்குளம் கற்குவாரி வீதியின் 1.05 கிலோ மீற்றர் வீதி 8 மில்லியன் ரூபாய் செலவிலும் தச்சடம்பன் பெரிய புளியங்குளம் வீதியின் 1.04 கிலோ மீற்றர் 7 மில்லியன் ரூபாய் செலவிலும் 2011ஆம் ஆண்டு நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யபபட்டுள்ளன. (கே)

# ஆசிரியர்களிடம் பிச்சை எடுப்பவர்களாக சிறுவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள்

## மட்டக்களப்பு அரச அதிபர் குற்றச்சாட்டு



(மட்டக்களப்பு)

பாடசாலைக்குச் செல்கின்ற சிறுவர்கள் கல்வியை பெற்றுக் கொள்வது அவர்களது உரிமையாகும். அவர்கள் விரும்பிய வழியிலே அவர்களுக்கு கல்வி புகட்டப்படவேண்டும்.

ஆனால் அந்த உரிமை சலுகையாக மாற் றபபட்டு கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் தான் அங்கு உரிமை மிக்கவர்களாகவும் அதிகாரம் மிக்கவர்களாகவும் இருக்கின்றார்கள். அவர்களிடம் பிச்சையெடுப்பவர்களாக சிறுவர்கள் மாற்றப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

நிகழ்வு ஒன்றில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

சிறுவர்கள் இந்தச் சமூகத்திலே தங்களுடைய உரிமையையும் சுதந்திரத்தையும் பெற்றுக் கொள்வதற்கு சகல உரித்தும் உடையவர்களாவார்கள். ஆனால இந்தச் சமூகம் அவர்களுடைய அறியாமையை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு அவர்கள் சிறுவர் வேலை உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கும் அழுத்தங்களுக்கும் உள்ளாக்கப்பட்டுக்கொண்டு தங்களுடைய குறைகளை வெளியே சொல்ல முடியாதவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல் தாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற குடும்பத்தில் ஏற்படுகின்ற குடும்பப்பிரச்சினைகள், பெற்றோர்களுடைய சமூகவியல் பிரச்சினைகள், அவர்களிடையே காணப்படுகின்ற சமூகத்திற்கு எதிரான செயற்பாடுகள் போன்ற அழுத்தங்களுக்கெல்லாம் சிறுவர்கள் முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

நாங்கள் அழகான கட்டடங்கள், அலுவலகங்கள், பாடசாலைகளைக் கட்டுவதால் இந்தச் சமூகத்தை அபிவிருத்தி செய்துவிட்டோம் என்று மார்புதட்டிக்கொள்வதில் அர்த்தமில்லை.

இங்குள்ள சிறுவர்கள் சரியான முறையில் பராமரிக்கப்படுகின்றார்களா, அவர்களுடைய தேவைகள் சரியாக நிறைவேற்றப்பட்டுள்ளதா, அவர்கள் ஆரோக்கியமான மகிழ்ச்சியான குடும்பத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களா, அவர்களுக்கு கல்வியில் சரியான வசதி செய்து கொடுக்கப்படுகின்றதா, அவர்கள் வாழ்கின்ற சமூகம் அவர்களை சரியாக வழிநடத்திக் கொண்டிருக்கின்றதா, அவர்களுக்கு சரியான முறை யில் மதப் போதனைகளும் அறநெறிகளும் எங்களுடைய கலாசாரங்களும் புகட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றதா என்பன பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

நாங்கள் இன்று அந்நிய மோகம், வெளிநாட்டு கலாசாரம், இலத்திரனியல் ஊடகங்களின் ஆக்கிரமிப்பு, நவீன தொழிநுட்பங்களின் ஆக்கிரமிப்பு போன்றவற்றின் மத்தியில் எங்கு வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்பதை மறந்து எங்களுடைய விழுமியங்க்ளையும் பண்பாடுகளையும் மறந்து முகவரிகள் தொலைந்தவர்களாக மாறியிருக்கின்றோம் என்றார்.

# மந்தகதியில் செயற்படும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசசபை மந்தகதியில் செயற்பட்டு வருவதாக புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தின் தலைவர் இ.துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில்கடந்த 2010ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியேற்றம்செய்யப்பட்ட நிலையில் புதுக்குடியிருப்பு நகரில் வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஏற்ற ஒழுங்குகளை பிரதேச சபை சீராக இன்று வரைசெய்யவில்லை. பொதுவாக புதுக்குடியிருப்பு சந்தை அடிப்படை வசதிகள் கூட இன்னும் ஏற்படுத்தித் தரப்படவில்லை. இதனால் புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள 350 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தன்னு டைய சேவையை உரிய முறையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். (கே)

# பரமர் சங்கமம்



"பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டு போகுமா? மியா.. மியா" என்டொரு பழைய சினிமாப் பாடல் சொல்வது போலத்தான் ஒரு சில புத்திஜீவிகள் விஞ்ஞானிகள், ஆய்வாளர்களின் கூற்றுக்கள் அமைந்துள்ளதைப் பத்திரிகைகள் வாயிலாகப் படித்து வேதனைப் படவேண்டிக் கிடக்கு.

சமீபத்தில் ஆய்வாளர் ஒருவர் வெளியிட்ட கருத்து உலகெங்கும் பெரிய பரபரப்பையே தோற்றுவித்துள்ளதாம். பல நூற்றாண்டு காலங்களுக்கு முன்பாகவே ஆய்வாளர்கள், புத்திஜீவிகள், விஞ்ஞானிகள் ஏற்றுக்கொண்டு நடைமுறையில் பாவனையில் இருக்கும் சில அடிப்படைக் கருத்துக்களைக் கூட இந்தப் புதிய விஞ்ஞானிகள் பொய்யாக்கப்பார்க்கிறார்கள்.

அவுஸ்ரேலியாவில் இருக்கும் மனோதத்துவ ஆய்வு மையத்தின் தலைமை விஞ்ஞானியான பியர்ஸ்ஹறாவ் ஆறாவது அறிவு மனிதர்களுக்கு இல்லை. எண்டறிவித்துள்ள கூற்று உலகத்தையே ஒருக்கால் ஸ்தம்பிக்க வைத்து விட்டதென்றால் மிகையாகாது.

ஒவ்வொரு புத்தி ஜீவிகளும் உலக வரலாற்றில் தத்தமது பெயர்களைப் பொறித்துக் கொள்வதற்கு என்னென்னவோ எல்லாத்தையும் செய்துகொண்டிருக்கிறார்கள். கேட்டால், தொடுதல், பார்த்தல், முகர்தல், சுவைத்தல் ஆகிய ஐந்து அறிவுகள் மட்டுமே மனிதனுக்கு உண்டெனஅவர் நிறுவ முயற்சிக்கிறார்.

அதேவேளை மேற்படி ஐந்து அறிவுகளுடன் சிந்திக்கும் ஆறாவது அறிவு என்பது தனியாகச் செயற்பட முடியாது எனத் தெரிவித்துள்ள பியர்ஸ்ஹறாவ விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் எந்த வேறுபாடும் இல்லை எனவும் தெரிவித்துள்ள கருத்து பரபரப்பை உலகெங்கும் ஏற்படுத்திக்கொண்டிருக்கு.

இவ்வேளை முன்னாள் ஸ்ரீலங்கா ஜனாதிபதியாக ஸ்ரீமதி சந்திரிக்கா அம்மையார் இருந்த காலை அலுவலக பாடசாலைகளின் நேரங்களை மிச்சப்படுத்த இலங்கை நேரத்தைக் கடிகாரங்களில் அரைஒரு மணிநேரத்தால் மாற்றம் செய்து பின்வாங்கிய செயற்பாடுகள் நினைவில் வந்து போவதையும் பரமரால் தவிர்க்க முடியவில்லை.

அதுபோலவே கின்னஸ் புத்தகத்தில் பெயரைப் பொறித்துக் கொள்ள ஒரு சில புத்திஜீவிகள் செய்யும் பொய்யும் புரட்டும் உலக நகைச்சுவையாக மாறி விடுவதையும் சொல்லலாம்.

அவுஸ்ரேலிய மனோதத்துவ நிபுணருக்கு அதிகமாக ஜோசித்ததால் தட்டிப் போட்டுதோ எண்டும் எண்ணத் தோன்றுகிறது. விலங்குகளில் இருந்து விசேடமாக மனிதனுக்கு அமைந்துள்ள அறாவது அறிவை பியர்ஸ்ஹறாவ் போன்று ஆறாவது அறிவைக் கொண்டே ஆய்வு செய்து பித்துப்பிடித்து அறிக்கை சமர்ப்பிக்கலாமா?

ஏதோ சில வேளைகளில் மனிதன் பியர்சைப் போலவே பித்துப் பிடித்து மிருகங்களாகி விடுவதை மட்டும் வைத்துக்கொண்டு மனிதனுக்கு ஆறாம் அறிவு இல்லை எண்டு பூனையைப் போல் கண்ணை மூடிக்கொண்டே முடிவெடுக்கிறது சரியே... என்ன நான் சொல்லுறே..

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

**English Language** 31 E I

**TEST 1**

**The following is an application form issued by the school Health Club. Fill in the form using the clues given in the box.**

**APPLICATION FORM TO JOIN**
**THE SCHOOL HEALTH CLUB**

Full Name (1) ..................................
Address (2) ..................................
Age (3) .................................. Date of Birth (4) ...............
Class (5) .................................. Hobby (6) .......................
Posts held in school (7) ..................................
Favourite subject (8) ..................................
Date (9) ................. Signature (10) .......................

- Shalini
- Science
- 15 Years
- Prefect
- Growing medicinal plants
- 8 September 2011
- Grade 10^c
- 16, Dharmarama Road, Kalutara.
- 3rd April 1996
- Shalini Perera

**TEST 2**

**Following is an extract from Daily Mirror news paper. Match the incidents with the titles given in the box. Write the correct letter in the box provided.**

(1) [ ]
A 40 year old woman was killed when she was knocked down by a speeding double cab in Madurankuliya.

(2) [ ]
An illlicit hide out producing Kasippu was raided by the p olice during a raid carried out in Ingiriya.

(3) [ ]
Police arrested a person who robbed a mobile phone worth around Rs. 15,000 owned by a resident of Weliweriya.


(4) [ ]
A body of a person between 55 and 60 years of age was washed ashore last morning near the Chilaw sea area.

(5) [ ]
Police arrested a person who allegedly attempted to enter a house in the Digana area in Teldeniya.

(a) Mobile phone thief arrested.
(b) Body washes ashore.
(c) Illicit Kasippu den raided.
(d) Speeding double cab kills woman.
(e) Police arrest tresspasser.

**TEST 3**

**Write 5 sentences about the picture.**



(1)..........................................................................
(2)..........................................................................
(3)..........................................................................
(4)..........................................................................
(5)..........................................................................

**TEST 4**

**following is a letter written by Gamini to his friend Gayan. Fill in the blanks to complete the letter. Use the words given in the box.**

26, 1/3, Colombo Road,
Matale.
27.08.2011

Dear Gayan,
I was very (1) ......................... to hear that your younger sister had (2) ............................... in a road accident. Please accept my deepest (3) ............................
I'm sorry, I couldn't attend the (4) .......................... as I was in Badulla that day. Please (5) ...................................... My condolences to your family I'll come and see you soon.

Sincerely yours,
Gamini.

**convey /funeral / died / sad / sympathies**

**TEST 5**

**Complete the following telephone conversation using the utterances given in the box.**

**Receptionist :** Good morning, Royal Institute, Colombo.
**Jeya :** (1) ....................................... Could I get some information about the (2) ............................ conducted by your institute?
**Receptionist:** It's a one year course. We have already started enrolment for this year.
**Jeya :** (3) .............................. can I apply for the course?
**Receptionist:** We've published the course (4) .......................... in the Sun day Observer.
**Jeya :** Is it a (5) ................................ course?
**Receptionist:** We have two courses, one in the weekend and the other durling the weekdays.

**weekend / Good morning /details / How / course**

**TEST 6**

**Write a paragraph on one of the following. Use about 50 words.**

(a) A picnic to the beach. (b) Gardening is my hobby.

..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

**TEST 7**

**Use the correct linking word in the blank to complete the following sentences. Select the words from the box. Two extra words are given.**

1) You must work hard ................................ you want to pass the exam.
2) You will miss the train ................................ you hurry
3) Mrs. Perera has been teaching in our school ................................ 2000.
4) The Victims will be kept in refugee camps ....................... they get aids from the government.
5) I am suffering from a severe back pain ....................... a couple of weks.

**because / till / since / for / but / unless / if**

**TEST 8**

**You are going to have a Sharamadana Campaign in your school to clean the surrounding in order to irradicate dengue. Create a poster to inform the public about this event. Make your poster an eye catching one.**

## Part II

**TEST 9**

**The following is an extract on 'My favourite room' There are eleven mistakes in it. They are underlined. Correct the mistakes and write them in the spaces provided. First one is done for you.**

**My favourite room**

My favourite (1) rooms is our kitchen. Perhaps the kitchen is the (2) more important room in many (3) house, but it is (4) particular so in our house because (5) its also the main meeting place for family and (6) friend. I have so many happy (7) memory of times spent (8) their. Special occasions such as (9) make christmas cakes or birthday cakes, troubled times, which (10) leads to comforting cups of tea (11) at the middle of the night.

(1) ........................................
(2) ........................................
(3) ........................................
(4) ........................................
(5) ........................................
(6) ........................................
(7) ........................................
(8) ........................................
(9) ........................................
(10) ........................................
(11) ........................................

**TEST 10**

**Complete the following sentences using appropriate verbs in the blanks. (Use present tense).**

(1) I ........................................ to work by car.
(2) My brother ........................................ ten cigarettes a day
(3) I ........................................ my clothes at the well.
(4) My sister ........................................ brown eyes.
(5) Mr. Rolf ........................................ in a bank.
(6) We ........................................ in a flat near the centre of town.
(7) Sherine ........................................ coffee to tea.
(8) I usually ........................................ to bed at 10.00
(9) My father . ........................................ me to do my homework.
(10) Sightseeing ........................................ my hobby.

**TEST 11**

**Match the descriptions given below with the titles given in the box. Write the tile in the space given.**

(1) ........................................

Scott, was born in Texas in 1868, into a poor. but musical black family. His father, who was a freed slave, played the violin and bugle but his favourite instrument was his neighbour's piano.

(2) ........................................

Picasso showed his truly exceptional talent from a very young age. He learned to draw before he could talk. He is a great lover of art. His father was a drawing tea cher. He often watched his father painting and sometimes was allowed to help.

(3) ........................................

Agatha Mary is possibly the world's most famous detective story writer. She wrote 79 novels and several plays. Her sales out number those of William Shakespeare.

(4) ........................................

Margaret Tyler lives in Vembley, north London. Her children have now grown up and left home, and so she lives alone with her incredible collections.

(5) ........................................

Hugo Grant Chester, 26, has been a tree surgeon for four years. He went to Oxford University to study archaeology, but he dropped out after just one term. Later he switched on to gardening and horticulture.

**- The Gardener**
**- The Oranament Collector.**
**- The Great musician**
**- Pablo - The painter**
**- World's No. 1 writer.**

**TEST 12**

**The following is a text written by Suzanne. Read it and answer the questions that follow.**

I love many sports, but best of all skiing. I first skied when I was six years old, and lived in Canada, and then for many years, in fact decades, I wasn't able to ski again, because I was living in hot places. But since I've been living in England, I've resumed skiing and it's even better than it was. For me now the place to ski is the Alps and particularly France. I live in England and winters are gloomy, and there's not much sun. So one of the wonderful things about skiing for me is the high up in the mountains.

A lot of other people like it, too and it can be rather crowded, especially around the lifts because you now have mechanical lifts that take you zooming up, flying up the mountains like a god, where as in Canada I had to walk up if I wanted to ski down.

The equipment you need for skiing are boots, and poles, Many people own their own equipment but I hire mine in the resort.

(1) When did Suxanne first ski? ........................................
(2) Why couldn't Suxanne ski for decades? ........................................
(3) Underline the correct word that fits the blank
Suxanne lives in ................
(a) Canada (b) England (c) France
(4) State whether the following statements are true of false.
(a) Suzanne has stopped skiing now. (..........)
(b) Suzanne loves the light and the brilliant sunshine up in the mountains (..........)
(c) There were mechanical lifts in Canada (..........)
(5) Name two types of equipment needed for skiing
(a) ......................... (b) .........................
(6) Find the words from the text which have the following meaning
(a) begin again after stopping ........................................
(b) a ten year period ........................................

**TEST 13**

**Complete the following description on 'Amanda' Use the words given in the clue box.**

**Amanda**

My sister Charlotte was (1) ................. when I was seven and my mother decided she needed a (2) ....................... to look after us. So we got Alison. She was very (3) .................... seventeen I think, and wonderful. I adored her. She only (4) ...................... part - time with us before she had (5) ............ her training at National College. She had to (6) .............................. us in the morning and (7) .............................. me to school. After school she made u sdelicoious teas and read us stories in bed.

**Clue box**

**nanny/ worked/ started/ born / dress / take/ young**

**TEST 14**

**Your friend failed in English and Mathematics at the G.C.E.O/L examination held last year. He/ She is going to drop studies. Write a letter to your friend advising him / her to repeat the exam this year. (Use about 150 words)**

........................................................................................
........................................................................................

# சுகாதாரச் சிற்றூழியர்கள் பணிப்புறக்கணிப்பு


யாழ்.போதனா வைத்தியசாலையில்


மந்திகை வைத்தியசாலையில்


சாவகச்சேரி வைத்தியசாலையில்


வவுனியா வைத்தியசாலையில்

(படங்கள்- பா.பார்த்தீபன், 116, 11)

## சந்தேகநபர்களுடன் தொடர்பா? அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு

பாதுகாப்பு அதிகாரிகள் எனக் கூறி, அரச வாகனங்களை மோசடியாக பெற்று வேறு நபர்களுக்குப் விற்பனை செய்த சந்தேக நபர்களுடன் லக்ஷ்மன் ஹுலுகல்லவிற்கு தொடர்புள்ளதா என்பது பற்றி விசாரித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் கியான் பிலப்பிட்டிய நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கறுவாத்தோட்டம் பொலிஸாருக்கே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

அரசசார்பற்ற நிறுவனங்களினால் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்கள், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் எனக் கூறி அவற்றை பெற்றுக்கொண்டு, போலி ஆவணங்களை தயாரித்து விற்பனை செய்த சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் உலக உணவுத்திட்டத்தில் பணியாற்றும் ஒருவர் நேற்றுமுன்தினம கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

விஸ்வ மதுசங்க என்ற இந்த நபர் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு இரண்டு மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே நேற்று முன்தினம கைது செய்யப்பட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபரை கைது செய்ய நீதிமன்றம் பிடிவிராந்து பிறப்பித்துள்ளது. தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் முன்னாள் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல கூறியதாக தெரிவித்து இந்த மோசடியில் ஈடுபட்ட காமினி மெண்டிஸ் என்ற சந்தேக நபருக்கே பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மோசடி செய்து விற்பனை செய்ததாக கூறப்படும் 6 வாகனங்கள் தொடர்பில் விசாரணைகளை நடாத்தி வருவதாக கறுவாத்தோட்ட பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

## பேராதனை பல்கலை மாணவன் மரத்திலிருந்து சடலமாக மீட்பு

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக் கழக வளாகத்தின் காட்டுப்பகுதியில் மரமொன்றில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட சடலம் பேராதனை பல்கலைக்கழகத்தில் கலை பிரிவில் கல்வி கற்கும் அங்குனுகொல பெலஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 23 வயதான வி.கே.நிஷாந்த என்பவருடையது என உறுதி செய்யப்பட்டுள்ளது.

சடலம் மீதான நீதவான் மரண விசாரணையின் பின்னர் மாணவனது பெயர் விபரங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் சடலம் மீதான பிரேத பரிசோதனை இடம்பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த மாணவன் கடந்த 2011ஆம் ஆண்டில் இடம்பெற்ற பகிடிவதை சம்பவமொன்றின் பிரதான சாட்சியாளர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## சமஷ்டிமுறை அரசியலமைப்பால் தமிழ் மக்களுக்கே பிரச்சினை

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்க செயலர் எச்சரிக்கை



(கொழும்பு)

சமஷ்டி முறையிலான அரசியலமைப்பை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதனை மீறி ஏற்படுத்தப்பட்டால் கொழும்பில் வாழும் தமிழ் மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் வசந்த பண்டார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக டாக்டர் வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில்.

இலங்கையின் 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்ற விதத்தில் சமஷ்டி முறைமையிலான அரசியலமைப்பு ஊடாகவே இந்தியாவின் மாநிலங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் இலங்கையில் ஒற்றையாட்சியின் கீழே அரசியலமைப்பு உள்ளது.

எனவே சிங்கள மக்கள் இச்சமஷ்டி முறைமையிலான அரசியலமைப்பை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள், எதிர்ப்பார்கள். அத்தோடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு இவ்வாறானதொரு அரசியலமைப்பை ஏற்படுத்த மக்கள் ஆணை வழங்கவில்லை. எனவே இதனை மீறி செயற்பட ஜனாதிபதியால் முடியாது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேவைக்காக வடக்கு தமிழ் மக்களுக்காக தனிப்பட்ட விதத்தில் எதனையும் செய்ய முடியாது. இதனை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தெற்கில் மோதல்கள் வெடிக்கும் சூழ்நிலைகள் உருவாகும். 30 வருட கால யுத்தத்தால் பல அழிவுகளை சந்தித்தோம். இனி மேலும் அழிவுகள் வேண்டாம் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். ஆனால் கூட்டமைப்பினருக்கு தீர்வுகளை காண வேண்டும் என்ற அக்கறை கிடையாது. மாறாக அவர்களுக்கு நாட்டில் அழிவுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்பதும் தனித் தமிழீழ கொள்கை நிறைவேற வேண்டும் என்ற நோக்கிலேயே உள்ளனர்.

அதேவேளை, சமாதானத்தையே விரும்பினேன். ஆனால் இன்று ஒரு தனிக்குடும்பம் அதிகாரங்களை தன் வசம் வைத்திருப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இந்தியாவில் தெரிவித்திருப்பதும், அதேபோன்று இலங்கைக்கு வந்த இந்திய அமைதிப் படையினர் முன்னாள் தளபதி ஹரிஹரன் இலங்கை இராணுவமயப்படுத்தப்பட்டு வருகிறது எனக் கூறியிருப்பதும் இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் முன்வைக்கப்படவுள்ள பிரேரணையை இலக்கு வைத்த கருத்துக்களாகுமென்றும் டாக்டர் வசந்த பண்டார மேலும் தெரிவித்தார்.

## யாழ்ப்பாண மாவட்டம் புகைத்தலில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டம் புகைத்தலில் முதலாம் இடத்தில் இருப்பதாக அண்மையில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று மேற்கொண்ட ஆய்வொன்றில் தெரிய வந்துள்ளதாக தெல்லிப்பளை சுகாதார வைத்தியதிகாரி தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய போதைப் பொருள் புகைத்தலுக்கு எதிரான அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பைத் தொடர்ந்து இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.



இதனடிப்படையில் முதலாம் இடத்தில் யாழ்.மாவட்டமும் இரண்டாம் இடத்தில் கொழும்பு மாவட்டமும் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 43 வீத மானவர்களும் கொழும்பு மாவட்டத்தில் 39 வீதமானவர்களும் புகைத்தலில் ஈடுபடுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெல்லிப்பளை சுகாதார வைத்தியதிகாரி தெரிவித்துள்ளார்.

# புருண்டியில் வெள்ளப்பெருக்கு; நிலச்சரிவில் சிக்கி 60 பேர் பலி




ஆபிரிக்க நாடான புருண்டியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 60 பேர் மரணமடைந்துள்ளனர்.

மத்திய ஆபிரிக்காவில் புருண்டியின் தலைநகரில் பலத்த மழைபெய்து வருகின்றது. இதனால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் பல வீடுகள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டன. புஜீம் புராவின் புறநகர் பகுதியில் கடும் நிலச்சரிவு ஏற்பட்டது.

அதில், ஏராளமாமன வீடுகள் பூமிக்குள் புதைந்தன. இந்தச் சம்பவத்தில் 60 பேர் உயிரிழந்தனர். தகவல் அறிந்ததும் பொலிஸாரும், இராணுவமும் விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

காயம் அடைந்த நூற்றுக் கணக்கானோர் வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. எனவே, இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

# மணமகனுக்கு தாலி கட்டிய மணமகள்



திருமண நிகழ்வின் மூலம் ஆணுக்குப் பெண் சமம் என்பதை செயலில் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள் தமிழகத்தின் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த துப்புரவுத் தொழிலாளர் தம்பதியர்.

வசந்தி, சதீஷ் ஆகிய துப்புரவுத் தொழிலாளர்களுக்கு நீடா மங்கலத்தில் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் இருவரும் மாலை மாற்றிக் கொண்டனர். பின்னர், வழமைபோல் மணமகன் மணமகள் கழுத்தில் தாலி கட்டினார். இதையடுத்து மணமகன் கழுத்தில் மணமகள் வசந்தியும் தாலி கட்டினார்.

திருமண நிகழ்ச்சியில் பங்கேற்றோர், வழக்கத்துக்கு மாறாக நடைபெற்ற இந்த நிகழ்வைக் கண்டு அதிர்ந்துபோயினர். ஆணும் பெண்ணும் சமம் என்பதை விளக்கும் நோக்கில் இந்த நிகழ்வு நடாத்தப்பட்டதாக குடும்பத்தினர் விளக்கிய பின்னரே, நடந்ததை உணர்ந்த பார்வையாளர்கள் அந்தக் குடும்பத்தினரைப் பாராட்டி வியந்தனர்.

## உலகச் செய்திகள்

# இந்தியா - பாகிஸ்தான் இணைந்து திரைப்படங்களை தயாரிக்க வேண்டும்

## நடிகை விருப்பம்



இந்தியா பாகிஸ்தானில் உள்ள திரைத்துறையினருடன் இணைந்து படங்களைத் தயாரிக்க வேண்டும் என நடிகை 'பானா ஆஸ்மி விருப்பம் தெரிவித்துள்ளார்.

சிந்து திருவிழாவில் பங்கேற்பதற்காக பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவர் பிலாவல் பூட்டோ விடுத்த சிறப்பு அழைப்பின் பேரில் 'பானா ஆஸ்மி கராச்சி சென்றுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் மீண்டும் கராச்சிக்கு வந்திருப்பதற்காக மகிழ்வடைகிறேன். பாகிஸ்தானுக்கு வருவது எப்போதுமே மகிழ்ச்சியளிக்கக் கூடிய விடயம். ஏனெனில் இருநாட்டு மக்களுக்கும் இடையே பொதுவான அம்சங்கள் ஏராளமானவை உள்ளன. சக மனிதர்களுடன் நாம் தொடர்பில் இருப்பதும், அவர் களைப் போலவே கலாசாரம், கலைகளில் பொதுவான அம் சத்தைக் கொண்டிருப்பதும் வரவேற்கத் தக்க அம்சம்.

பாகிஸ்தான் திரைப்படங்களில் நடிப்பதற்கு வாய்ப்பு வந்தால் உண்மையிலேயே மிகவும் ஆர்வத்துடன் அதனைப் பரிசீலிப்பேன். கதைக்களம் மிக வலுவாக இருந்தால் ஒரு நடிகையாக எந்த நாட்டிலும், எந்த மொழியிலும் நடிக்கத் தயாராகவே இருக்கிறேன். இருநாட்டு திரைத்துறையினரும் இணைந்து திரைப்படங்களைத் தயாரிக்க வேண்டும். அது நாடுகளுக்கும் பயனுள்ளதாக அமையும் என்றார்.

# அமெரிக்கா - தென்கொரியா இராணுவப் போர்ப்பயிற்சி



கொரிய வளைகுடாவில் அமெரிக்கத - தென் கொரியத் துருப்புக்களின் இணைந்த பலம் வாய்ந்த வருடாந்த இராணுவ போர்ப்பயிற்சி இந்த மாதம் இடம்பெறவுள்ளது.

இந்நடவடிக்கையானது வட கொரிய அமெரிக்க உறவில் நிலவி வரும் முறுகல் நிலையை மேலும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

வட கொரிய சிறையில் கடும் துன்பத்தை அனுபவித்து வரும் அமெரிக்கப் பிரஜையான கெனித என்பவரை விடுவிக்கும் முகமாக வட கொரியா வரவிருந்த அமெரிக்க இராஜதந்திரியின் பயணம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. சென்ற வருடம் மே மாதம் கொரியாவைப் பூர்வீகமாகக் கொண்ட அமெரிக்கப் பிரஜை கெனித்பே, வடகொரியாவிற்குத் தன் வியாபார நிமித்தம் பயணித்த போது, தாய் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் செயலில் ஈடுபடும் பயணம் அதுவெனக் குற்றஞ்சாட்டப்பட்டுப 15 வருட கடுங்கால தண்டணை விதிக்கப்பட்டது.

வட கொரியா தன் அணு ஆயுதக் கொள்கைக்கு அமெரிக்காவைப் பணியவைக்க, கெனித்தை பயன்படுத்த முயல்வதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சு குற்றஞ் சாட்டியுள்ளது.

அத்தோடு அமெரிக்கத் தென்கொரியத் துருப்புக்களால் மேற்கொள்ளப்படவிருக்கும் இராணுவ நடவடிக்கையானது ஏற்கனவே திட்டமிடப்பட்ட மிகவும் வெளிப்படையான பாதுகாப்பு நடவடிக்கையெனவும் அமைச்சின் அறிக்கையில் மேலும குறிப்பிடப்பட்டுள்ளது.

# பெருக்கெடுத்தது "தேம்ஸ் நதி"



(லண்டன்)

இங்கிலாந்தில் பெய்யும் கன மழையால் தேம்ஸ் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் லண்டன் அருகே வெள்ளம் புகுந்துள்ளது.

இங்கிலாந்தில் தற்போது வறண்ட வானிலை நிலவுகிறது. ஆயினும் நாட்டின் பல பகுதிகளில் சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது.


இதனால் இங்கிலாந்தின் மிகப்பெரிய தேம்ஸ் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து கரையோரம் இருக்கும் கிராம மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளப்பெருக்கு தொடர்ந்து அதிகரித்து வருவதால் தேம்ஸ் நதியின் சில கரைகள் உடைந்துள்ளது. இதனால் லண்டன் அருகேயுள்ள பெர்க்ஷர், சுர்கி ஆகிய நகரங்களுக்குள் வெள்ளம் புகுந்தது. அவை மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே, அப்பகுதியில் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. மக்கள் வசிக்கும் பகுதிகளில் 2 அடி உயரத்துக்கும் மேலாக தண்ணீர் தேங்கி நிற்கிறது. அப்பகுதியில் மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அதில் இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மழை வெள்ளத்தை தடுக்க மிகவும் தாழ்வான பகுதிகளில் மணல் மூட்டைகளை அடுக்கி வருகின்றனர்.

இதேவேளை வெள்ளம் பாதித்த பகுதிகளை பிரதமர் டேவிட் கமரூன், துணை பிரதமர் நிக்கிலாக் ஆகியோர் பார்வையிட்டனர். நிவாரண பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

# பறவைகளின் உயிரை பலியெடுத்தது புயல்



பிரான்ஸில் வீசிய கடும் புயலால் ஆயிரக்கணக்கான பறவைகள் உயிரிழந்துள்ளன. பிரான்ஸ் உட்பட ஐரோப்பிய நாடுகளில் சமீபகாலமாக அதிகளவில் புயல் வீசி வருகின்றது.

பிரான்ஸில் கடந்த 15 நாட்களாக வீசிய கடும் புயலால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன், 55,000 வீடுகள் இருளில் மூழ்கின.

இந்நிலையில் பப்பிம், கியுல்மோட்ஸ்,ரேசர்பில்ஸ் மற்றும் கிட்டி வேக்ஸ் போன்ற 5,000 இற்கும் மேற்பட்ட சிறிய இனப்பறவைகள் இறந்துள்ளன.

இதுகுறித்து தேசிய பறவை பாதுகாப்பு லீக்கூறுகையில், இப்புயலானது பாதிப்பின் எண்ணிக்கையை அதிகரித்து கொண்டே தான் போகிறது அதிகளவான மாசு சூழ்ந்திருப்பதால் பறவைகள் இறந்ததற்கு வானிலையை மட்டும் காரணம் காட்ட இயலாது எனவும் தெரிவித்துள்ளது.

# பயணிகள் போக்குவரத்தை சீராக்க யாழ்.செயலகத்தில் கலந்துரையாடல்



வடபிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபைக்கும் தனியார் பேருந்து சங்கத்திற்கும் இடையிலான கலந்துரையாடலொன்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட அரச அதிபர் செயலகத்தில் வடபிராந்திய இ.போ.சபை குழுவினருக்கும், தனியார் பேருந்து சங்க குழுவினருக்குமிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது யாழ்.அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மூன்று விடயங்களை முன்வைத்தார். முதலாவதாக யாழ்.-பருத்தித்துறை போக்குவரத்து சம்பந்தமாக அச்சிடப்பட்ட நேர அட்டவணையை விநியோகித்து இருதரப்பும் அட்டவணையை மீளாய்வு செய்து சுமுகமான முடிவெடுக்குமாறு கூறினார், இதற்கு இருதரப்பினரும் சம்மதித்தனர். இரண்டாவதாக தனியார் போக்குவரத்து பேருந்துகளில்வரும் 15.03.2014ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் பயணச் சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டும். மூன்றாவதாக பலாலி வீதி போக்குவரத்து அட்டவணையையும், மேலதிக பிரச்சினைகளையும் மீளாய்வு செய்து இருதரப்பினரும் எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி குகேந்திரன் தெரிவிக்கையில், சட்ட ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்பட்டால் உடன் யாழ்.போக்குவரத்து பிரிவு அத்தியட்சகர் . சமந்தசில்வாவின் கைத்தொலைபேசிக்கு தொடர்பு கொள்ளுமாறு கூறியதுடன், இது சம்பந்தமான பிரச்சினைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்வினைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட போக்குவரத்து பிரிவு அத்தியட்சகர் சமந்தசில்வா, யாழ் மாவட்ட தனியார் போக்குவரத்து சங்கத் தலைவர் பொ.கெங்காதரன் தலைமையில் 6 பேரும், வடபிராந்திய இலங்கை போக்குவரத்து சபையின் செயலாற்று முகாமையாளர் கே.கேதீஸன் தலைமையில் 9 பேரும் பங்கு பற்றினர்.

## பலாலியில்...

இந்தச் சம்பவத்தில் சுவர் இடித்து அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த சமயமே சுவர் இடிந்து குறித்த இராணுவ வீரர் மீது வீழ்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர் உடனடியாக பலாலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நேற்று முற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா,இ,25)

## அரசின்..

கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றது. அதன் போது எம்மால் சில நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டது. எனினும் ஜனாதிபதி அதற்கான எவ்வித கருத்துக்களையும் அவர் தரப்பில் இருந்து வெளியிடவில்லை.அதன் பின்னரும் நாம் அரசாங்கத்துடனான சில தனிப்பட்ட பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டும் அரசாங்கம் எமக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாடாளுமன்ற தெரிவுக் குழுக் கூட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. குறிப்பாக மங்கள முனசிங்க குழுவின் அறிக்கை, சந்திரிகா குமாரதுங்கவினால் முன்வைக்கப்பட்ட மூன்று அறிக்கைகள் மற்றும் சர்வகட்சி குழுவின் அறிக்கைகள் உள்ளிட்ட 5 அடிப்படையிலான ஆவணங்கள் மூலம் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டது. எனினும் நாம் முயற்சி செய்த அனைத்து முயற்சிகளும் தோல்வியிலேயே முடிவடைந்துள்ளன.

யுத்த முடிவின் பின்னர் அரசாங்கம் சர்வதேசத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளும் இதுவரையில் நடைமுறைப்படுத்தவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளும், சர்வதேச அமைப்பினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளும் நியாயமானவையே. இதில் ஒன்றினைக்கூட அரசாங்கம் மதித்தோ அல்லது அதன் முக்கியத்துவத்தினை உணர்ந்தோ செயற்படாதவிடத்து எம்மாலும் அரசாங்கத்தை நம்பி ஏமாற முடியாது.

நாம் நாடாளுமன்ற தெரிவுக் குழுவிற்கு போவதனால் எவ்வித அர்த்தமும் இல்லை. பெரும்பான்மை மக்களின் அடக்குமுறையின் கீழ் எம்மால் முன்வைக்கப்படும் எந்தவொரு கோரிக்கைகளும் அர்த்தமற்ற ஒன்றாகவே சென்று முடிவடையும் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச சக்திகளை நம்பியே செயற்படுகின்றது. அரசாங்கத்தினால் எமது மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க முடியாததையே நாம் சர்வதேசத்திடம் கேட்கின்றோம். இவற்றில் சட்டமுரணான எவையுமோ அல்லது தேசத்துரோக செயற்பாடுகள் எவையுமோ இல்லை.

அரசாங்கம் எதைக் கூறினாலும் அரசாங்கமும், ஜனாதிபதியும் உண்மையாக செயற்படும் வரையில் நாம் அரசாங்கத்தினை நம்பத்தயாராக இல்லை. தெரிவுக் குழு விடயத்திலும் எமக்கு நம்பிக்கை இல்லை.தமிழ் மக்களையும் இந்நாட்டின் குடிமக்களாக மதித்து நடத்தும் வரையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிபந்தனைகள் தொடரும். எனவும் அவர் தெரிவித்தார்.

# முகமூடி உற்பத்திக் கிராமம் களுத்துறையில் திறந்துவைப்பு



களுத்துறை மாவட்டத்தின் ஹொறனைப் பகுதியில் பாரம்பரிய முகமூடி உற்பத்தி கிராமத்தை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்து பயனாளிகளின் பயன்பாட்டுக்காக கையளித்தார்.

களுத்துறை மாவட்டத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டார்.

முன்பதாக பாரம்பரிய முகமூடிக் கிராமத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தியோகபூர்வமாக திறந்து வைத்ததுடன் பயனாளிகளுடன் கலந்துரையாடி அவர்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

பாரம்பரிய முறைப்படி நிகழ்விடத்திற்கு அழைத்து வரப்பட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிரேஷ்ட அமைச்சர் ரத்தினசிறி விக்கிரமநாயக்க உள்ளிட்டோர் வரவேற்றதைத் தொடர்ந்து சமய வழிபாடுகளிலும் பங்கேற்றனர்.

தொடர்ந்து காட்சிப்படுத்தப்பட்டிருந்த ஆக்கப் பொருட்களையும் அமைச்சர் பார்வையிட்டதுடன் துறைசார்ந்தோருடனும் கலந்துரையாடினார்.

இவ்வாறு அப்பகுதியில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியுடன் தேசிய அருங்கலைகள் பேரவையினால் 80 பயனாளிகளுக்கு 2 மில்லியன் ரூபா செலவில் தொழிற்கூடங்கள் வீடுகள் தோறும அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வின் இறுதியில் பயனாளிகளுக்கு தொழிற்துறை சார்ந்த தொழில் உபகரணங்களும் மரக் கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது அமைச்சின் பணிப்பாளர் அஜித் ஏக்கநாயக்க உள்ளிட்ட அமைச்சினதும் ஏனைய துறைசார்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## புதுக்குடியிருப்பில்...

புதுக்குடியிருப்பு வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டு விசாரணையின் பின்னர் நேற்று மாலை 6.30 மணியளவில் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இது தொடர்பில் விரிவான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (116)

## சீனாவின்...

ஆகியவற்றைப் பாதுகாக்கும் இலங்கை அரசாங்கத்தின் முனைப்புக்களுக்கு முழு அளவில் ஒத்துழைப்பு வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவிற்கு விஜயம் செய்துள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மக்கள் தங்களது உள்விவகாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணக் கூடிய ஆற்றலைக் கொண்டிருப்பவர்கள் என்பதனை சீனா நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் சீனாவின் துணைப்பிரதமர் லீ யுவான்சோவை சந்தித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என லீ தெரிவித்துள்ளார்.

## அபிவிருத்தியில்...

பாதிக்கப்பட்டவர்களின் நலன்கள் பற்றிச் சிந்திக்கவேண்டியுள்ளது. நாங்கள் காட்டும் கரிசனையிலும் பார்க்க அரசு அதில் எண்ணம் கொள்வதில்லை என்பதை நான் சுட்டிக்காட்டினேன். அபிவிருத்தி செயற்றிட்டங்களில் சேர்ந்து ஒத்துழைக்ககூடிய சந்தர்ப்பமும் சூழ்நிலையும் வரும் போது நீங்களும் ஒத்துழைக்கவேண்டும் என ஐ.நா.பிரதிநிதி கேட்டுக்கொண்டதாகவும் இதுவிடயத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லை மக்களின் நலனின் யார் பங்கெடுத்தாலும் அதில் பிரச்சினை இல்லை மக்களின் பிரச்சினையும் தேவைகளும் தீர்க்கப்படவேண்டும் என்பதே எமது அவா எனவும் ஐ.நா.வின் ஒத்துழைப்புக்கு எமது வரவேற்பையும் அரசு சில விடயங்களில் எம்மை தவிர்த்து வருவதாகவும் தான் நினைத்தவாறு செயற்படுவதையே நான் உணர்கிறேன். இவ்வாறான சூழ்நிலை மாறுவதை நாம் வரவேற்கிறோம். என இச்சந்திப்பின் போது பேசப்பட்டதாக வடமாகாண முதலமைச்சர் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் ஐ.நா.வின் அபிவிருத்தித் திட்டங்கள் எந்த அளவில் மேற்கொள்ளமுடியும் என்பது குறித்து ஆராயவே இவரது விஜயம் அமைந்திருப்பதாகவும், எம்முடன் இணைந்து பங்குபற்றாளர்களாக அவர்கள் இருப்பதை வரவேற்பதுடன் மூன்றாம் தரப்பின்றி எதுவுமே மேற்கொள்ள முடிவதில்லை அபிவிருத்தியிலும் அவ்வாறான சூழ்நிலையே உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## தனியார்...

ரைகளின் முதலாவது ஆண்டு முன்னேற்றம் தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் காணிகள் மக்களுக்கே என்பது அரசின் கொள்கை. இதற்கமைவாக வன்னியில் மக்களின் காணிகள் மீண்டும் மக்களுக்கே வழங்கப்படல் வேண்டும் எனக்குறிப்பிட்ட அவர்,

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மக்களுக்கு காணிகளை சட்டரீதியாக பகிர்ந்து அளிப்பதில் நீண்ட கால யுத்தம் ஒரு தடையாக இருந்து வந்துள்ளது.தற்போது மண்ணின் மகிமை திட்டத்தின் கீழ் மக்களின் காணிப்பிணக் குகள் தீர்க்கப்பட்டு வருகின்றன இதற்காக பிரதேச செயலர்கள்,மாகாண காணி ஆணையாளர், முதல்அமைச்சர் மட்ட அதிகாரிகள் வரை சிறப்பாக செயற்பட்டுவருகின்றனர் இதற்காக இவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். இருப்பினும் இன்னும் காணியற்ற மக்கள் ஏராளமானவர்கள் உள்ளனர் அவர்களுக்கு அரச காணிகளை இனம் கண்டு அவற்றினை சட்ட ரீதியாக பகிர்ந்தளிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அடுத்ததாக மத்திய வகுப்புத்திட்ட காணிகள் நீண்டகால பிணக்காக காணப்படுகின்றன இந்தப் பிரச்சினை அமைச்சரின் கவனத்திற்கு பல தடவைகள் என்னால் கொண்டுவரப்பட்டுள்ளது அதற்கமைவாக அவர் மேற்கொண்ட முயற்சிக்கு அமைவாக ஒரு வாரத்திற்குள் மத்திய வகுப்பு திட்ட காணிப்பிணக்குகள் தொடர்பில் விசேட அமைச்சரவை அனுமதி பெறப்பட்டு தீர்வு காணப்படவுள்ளது. எனவே மத்திய வகுப்புத்திட்ட காணிகளில் குடியிருக்கும் மக்களின் பிணக்குகளுக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் போதே அந்த மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு எம்மால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட முடியும். குறிப்பாக வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க முடியும் எனவே அண்மையில் அமைச்சின் தலைமையில் நடைபெற்ற உயர் மட்ட மாநாட்டில் எடுக்கப்பட்ட திர்மானங்களை விரைவாக நடைமுறைப்படுத்தி இந்த மக்களுக்கான நிரந்தர தீர்வினைப்பெற்றுதரவேண்டும் எனத்தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்,

இதனைவிட மக்களின் ஏனைய காணி பிணக்குகளை தீர்ப்பதற்கும் பல வழிமுறைகள் அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது பிரதேச செயலர்களுக்கும் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன எனவே விரைவாக காணிப் பிணக்குகளை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் குறிப்பாக பிரதேச செயலர்கள் பலர் எம்மிடம் காணிப்பிணக்குகளை தீர்ப்பதற்கு நில அளவை செய்வதில் தங்களுக்கு சிரமங்கள் இருப்பதாக கூறுகின்றனர். எனவே அமைச்சர் நில அளவை திணைக்களத்தின் முழுமையான பங்களிப்பினை பெற்றுத்தர உதவிசெய்ய வேண்டும் ஆளணி பற்றாக்குறை இருப்பின் அதனையும் நிவர்த்தி செய்து விரைவான நில அளவை செயற்பாடுகளுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டாரதென்னக்கோன், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் பல தடவைகள் என்னுடைய அமைச்சுக்கு வருகை தந்து இந்தபிரதேச மக்களின் காணிப்பிணக்குகள் தொடர்பில் எனது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார் குறிப்பாக மத்திய வகுப்புத்திட்ட காணிகளில் குடியிருக்கும் மக்களின் பிரச்சினைகளில் அவர் அதிக கவனம் எடுத்து எம்மிடம் வலியுருத்தியிருக்கின்றார் எனவேதான் விரைவில் மத்திய வகுப்புத் திட்ட காணிகளில் குடியிருக்கும் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் விசேட அமைச்சரவை அனுமதிபெற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம் எனவும்தெரிவித்தார்.

# ஐ.நா. துணைச் செயலாளர் நாயகத்துடன் அமைச்சர் பசில் சந்திப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் துணைச் செயலாளர் நாயகமும் அந்த அமைப்பின் அபிவிருத்தி வேலைத திட்டத்தின் ஆசிய பசுபிக் பணிப்பாளருமான ஹவூலிஹேங்க் சூ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை அவரது அமைச்சில் நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

இதன் போது விரிவாக கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நான்கு நாள் பயணமாக கடந்த 9 ஆம் திகதி இலங்கை வந்த ஹவூலிஹேங்க் சூ இலங்கை அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுடன் நடத்தும் சந்திப்புகளில் முதல் சந்திப்பாக இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

ஜக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் இலங்கையில் அடைந்ததுள்ள வெற்றியை புரிந்து கொள்வது, அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்கள், இலங்கையில் மேற்கொள்ளப்படும் ஐ.நாவின் எதிர்கால வேலைத்திட்டங்களுக்கான உதவியின் எதிர்கால பயணத்தை உறுதிப்படுத்துவது என்பனவே ஹவூலிஹேங்க் சூவின் இலங்கை விஜயத்தின் நோக்கமாகும்.

# "தமிழ் மக்கள் அரங்கம்" உதயம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் முகம்கொடுத்து வரும் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வுகளை எட்டும் முகமாக வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்காக சமூக ஆர்வலர்கள், கல்விமான்கள், இடதுசாரிக் கட்சிகள், கிராமிய அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் என்று பல தரப்பினரும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

மேற்படி அனைத்து தரப்பினரும் இணைந்து தமிழ் மக்கள் அரங்கம் என்ற பெயரில் செயற்படவுள்ளனர்.

இதற்கான ஆரம்பகட்ட கருத்தமர்வு ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் பங்குபற்றிய பலர் தமது கருத்துக்களை முன்வைத்தனர். எதிர்காலத்தில் தமிழ்மக்கள் முகம்கொடுக்கும் பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான புதிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்தில் எதிர்காலத்தில் மேலும் பல சமூக ஆர்வலர்கள் மற்றும் இடதுசாரி அமைப்புக்கள் ஆகியோர் இணைந்து செயற்படுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## உள்ளக அரங்கு திறப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்த வரோதய மகா வித்தியாலய உள்ளக அரங்கு இன்று காலை 9.00 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

அதிபர் வே.கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்துகொள்ளவுள்ளார். (இ)

# புலிகளுக்கு உதவிய பொலிஸ் அதிகாரி மீது விசாரணை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் சம்பந்தமான தகவல்களை மறைத்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் கம்பஹா உதவி பொலிஸ் அத்தியட்சகர் லக்ஷ்மன் குரேவுக்கு எதிரான வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி முதல் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்படவுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி ரோஹினி வல்கம வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கான இந்த உத்தரவை பிறப்பித்தார்.

சாட்சியம் வழங்குவதற்காக நேற்று நீதிமன்றத்திற்கு வந்திருந்த முதல் சாட்சியாளரான பயங்கரவாத விசாரணைப் பிரிவின் சேனக்க குமாரசிங்க, டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதால் சாட்சியமளிக்கும் திடமான உடல் நிலையில் இல்லை என அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு உதவி, அவர்களின் உறுப்பினர்களை தாக்குதல் நடத்தும் இலக்குகள் நோக்கி பாதுகாப்பாக அழைத்து சென்றதாக குற்றம் சுமத்தப்பட்டு பொலிஸ் அதிகாரி லக்ஷ்மன் குரே 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டடார்.

அதில் இருந்து அவர் கடந்த 5 வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அவர சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

# உயிரிழந்தது ராஜா யானை

(கொழும்பு)

கண்டி சிறிதலதா மாளிகை மகா எசல பெரஹெரவில் பதினைந்து வருடங்களாக புனித தந்த தாதுவை தாங்கி சென்ற வேவலதெனிய ராஜா யானை நேற்று இரவு 9.45 மணியளவில் உயிரிழந்துள்ளது. கண்டி ஸ்ரீ தலதா மாளிகை மகா எசல பெரஹெரவுக்கு மிகப்பெரிய சேவை செய்த வேவலதெனிய மகிந்தோதய விகாரைக்கு சொந்தமான ராஜா யானை இறக்கும் போது அதற்கு வயது 55 ஆகும்.

இது குறித்து மேற்படி விகாரையின் நிர்வாகக் குழுத் தலைவரான சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மகிபால ஹேரத் கருத்து தெரிவிக்கையில்,

உயிரிழந்த ராஜா யானை தென் மாகாணத்தின் அகுனுகொலபெலஸ் பிரதேசத்தில் பிடிக்கப்பட்டு 1976 ஆம் ஆண்டு அப்போதைய உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சராக இருந்த பீ.பீ.ஜீ.களுகல்லவின் ஊடாக வேவலதெனிய விகாரைக்கு அனபளிப்பு செய்யப்பட்டது என்றார்.

# சிற்றூழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா ஜனரஜ சுகாதார சேவைகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்தியசாலையில், பணியாற்றும் சுகாதார சேவை சிற்றுழியர்கள் நேற்று அரை நாள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

நாடளாவிய ரீதியில் சிறிலங்கா ஜனரஜ சுகாதார சேவைகள் சங்கம் முன்னெடுத்துவரும் தொழிற்சங்க நடவடிக்கையின் அங்கமாகவே இந்தப் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 7.30 மணி முதல் யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் சுகாதாரசேவைச் சிற்றூழியர்கள் வைத்தியசாலையின் புதிய நான்கு மாடிக்கட்டத்தொகுதியின் முன்பாக ஒன்று கூடி சுகாதார அமைச்சினால் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமது கோரிக்கைகளைத் தாங்கிய பதாகைகளுடன் பகிஷ்கரிப்பில் ஈடு பட்டனர்.

முற்பகல் 11.30 மணியளவில் அவர்களது போராட்டம் முடிவுக்கு வந்தது. (பா,இ,116)

## இராணுவத்தளபதிக்கு சேவை நீடிப்பு



இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரட்நாயக்கவின் பதவிக் காலம் மேலும் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இதற்காண பணிப்புரையை ஜனாதிபதி விடுத்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி தயா ரட்நாயக்க இராணுவத் தளபதி பொறுப்பை ஏற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இராணுவத் தளபதி ரட்நாயக்க எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி வரையில் பதவி வகிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மாதத்துடன் இராணுவத் தளபதி ஓய்வு பெற்றுக்கொள்ளவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மனிதப் புதைகுழியில் நேற்றும் எலும்புகள் மீட்பு

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி நேற்று மீண்டும் தோண்டப்பட்ட போது மேலும் ஒரு மனித எச்சம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதோடு ஒரு தொகுதி மனித எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அனுராதபுர சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரெட்ன தலைமையில் 21 ஆவது தடவையாக மீண்டும் தோண்டப்பட்ட போது இவை கண்டுபிடிக்கப்பட்டன.

இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்களின் எண்ணிக்கை 59 ஆக அதிகரித்துள்ளது.

ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனித எலும்புக்கூடுகளில் மேலும் 2 மனித எச்சங்கள் நேற்று பொதி செய்யப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது வரை 33 எச்சங்கள் பொதி செய்யப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் மன்னார் நீதவானின் உத்தரவிற்கமைவாக வைக்கப்பட்டுள்ளன.

மீண்டும் இன்று குறித்த அகழ்வுப்பணிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பல்லி இனங்கள் இந்தியாவுக்கு



இலங்கையின் இயற்கை சூழலுக்குள் மட்டுமே இருக்கும் சில வகை பல்லி இனங்கள் இந்தியாவின் மலையாள ஆயுர்வேத மருந்துகளை தயாரிப்பதற்காக கொண்டு செல்லப்படும் வர்த்தகம் ஒன்று பதுளை நகரமையமாக கொண்டு நடைபெற்று வருவதாக தெரியவருகிறது.

பிரதேசத்தை இரண்டு வர்த்தகர்கள் மற்றும் அரசியல்வாதி இணைந்து இந்த சட்டவிரோத வர்த்தகத்தை மேற்கொண்டு வருவதுடன் அதிகளவிலான விலைக்கு பல்லிகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதலை பல்லியினம், தென்னம் பல்லியினம், கபரை பல்லியினம் ஆகிய பல்லியினங்களுக்கு சந்தையில் அதிகம் கேள்வி நிலவுவதுடன் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இலங்கைகே உரிய பல்லியினங்களின் உடலிலுள்ள ஓமோன்கள் மூலம் இந்திய ஆயுர்வேத முறையில் மருந்துகளை தயாரித்து காயங்களை குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை காரணமாக இலங்கை பல்லியினங்களுக்கு அதிகமான கேள்வி நிலவுவதாகக் கூறப்படுகிறது.

# தேர்தல் பிரசாரத்துக்கு இலவச தபால் முத்திரை

## 'கபே' கண்டனம்

(கொழும்பு)

நடைபெறவிருக்கின்ற மாகாண சபைத் தேர்தலின் வேட்பாளர்கள் சிலர் இலவச தபால் முத்திரைகளை பாவிப்பதாகவும் அதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தலுக்கான அமைப்பு (கபே) தபால் அத்தியட்சகர், தேர்தல் ஆணையாளர், சபாநாயகர் ஆகியோரிடம் முறையிட்டுள்ளது.

சில வேட்பாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலவச முத்திரைகளை தமது .தேர்தல் பிரசார விளம்பரங்களுக்கு பயன்படுத்துவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இவ்வமைப்பு சபாநாயகரிடம் மேற்கொண்டுள்ள முறைப்பாட்டில் இவ்வாறான சீர்கேடுகள் தொடர்பில் கடந்த தேர்தல்களிலும் சுட்டிக் காட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ளதுடன் நடைபெறவிருக்கின்ற தேர்தலில் ஜக்கிய தேசியக் கட்சியின் விந்தன நிசாந்த கப்புத்தன் திறிகே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அனுர குணரட்ண மற்றும் நிலந்த ஹெந்தவிதாரன ஆகியோர் மேற்படி முறைகெட்ட செயலில் ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

# கே.பி.யின் மனைவி கொழும்பு வருகை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச ஆயுத விநியோகஸ்தராக இருந்து வந்த கே.பி. என்ற குமரன் பத்மநாதனின் தாய்லாந்து மனைவி இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

கே.பி இலங்கை பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டு, இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட நாளிலிருந்து அவரும் மனைவியும் பிரிந்து வாழ்ந்துள்ளனர். இந்நிலையில், அவர் இப்போது இலங்கைக்கு வந்துள்ளார்.

சர்வதேச புலனாய்வுப் பிரிவுகளின் உதவியுடன் கே.பி. 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி மலேசியாவில் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு அழைத்து வரப்பட்டார்.

அன்று முதல் படையினரின் பாதுகாப்பில் இருந்து வந்த அவர் 2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 17 ஆம் திகதி முதல் முல்லைத்தீவில் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இதன் பின்னர் விடுதலை செய்யப்பட்ட கே.பி.வடக்கு, கிழக்கு புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி அமைப்பு என்ற அரச சார்பற்ற நிறுவனத்தை நடத்தி வருவதுடன் செஞ்சோலை என அழைக்கப்பட்ட இடத்தில் போரில பெற்றோரை இழந்த சிறுவர்களின் காப்பகம் ஒன்றையும் நடத்தி வருகிறார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 பெப்ரவரி 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.